Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12



S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12426)

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி-24 | 09-08-2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை-172

### – பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக –

# அனைத்து தமிழ் கட்சிகளும் இணைந்து

# கொழும்பில் பெரும் கண்டனப்பேரணி

## பதவி விலகுமாறு கோரிக்கை

(கொழும்பு)

**பிரதியமைச்சர் மேர்வின் சில்வா இந்திய வம்சாவளி மக்களுக்கெதிராக அண்மையில் வெளியிட்ட அவதூறு கருத்துரைகளைக் கண்டித்தும்,அவரைப் பதவியில் இருந்து விலக்குமாறு கோரியும் நேற்று கொழும்பு நகரில் பெரும் கண்டனப்பேரணி ஒன்று இடம்பெற்றது. தமிழ் அரசியல்கட்சிகள் அனைத்தும் கலந்துகொண்ட இப்பேரணியில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.**

கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக மாலை மூன்று மணிக்கு ஆரம்பமான பேரணி மாலை4.30 வரை நடைபெற்றது. இதனை மலையக மக்கள்முன்னணி ஏற்பாடு செய்திருந்தது. பல கட்சிகளின் தலைவர்களும் இதில் கலந்து கொண்டனர்.

பிரதமர் அலுவலகத்தை நோக்கி இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்டது.


இலங்கையில் அனைத்து சமூக மக்களிடையே சுமூக உறவு தேவை என்றும், நாட்டில் சமாதானம் நிலவ வேண்டும் என்றும் அனைத்துத் தரப்பினரும் கோரிவரும் ஒரு நிலையில், இந்திய வம்சாவளி மக்களை தரக்குறைவாகப் பேசிய துணை அமைச்சரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று முக்கியமாகக் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாகக் கூறினார் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான்.

(12ஆம் பக்கம் பார்க்க)




## யாழ்.பொற்பதி வீதி விபத்தில் மாணவி ஸ்தலத்தில் பலி!

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் பொற்பதி வீதியில் நேற்றுக் காலை 7.45 மணியளவில் இடம்பெற்ற ஹன்ரர் வாகனம் உந்துருளி விபத்தில் உந்துருளியில் வந்து கொண்டிருந்த மாணவி அந்த இடத்திலேயே பலியாகினார்.

இச்சம்பவத்தில் பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த வாமதேவன் கீர்த்தனா (வயது 17) என்பவரே உயிரிழந்தவராவார். யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் க.பொ.த உயர்தர முதலாம் வருட உயிரியல் பிரிவில் கல்விகற்று வரும் பிரஸ்தாப மாணவி சம்பவ

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை நகரில் படைக்குறைப்பு தாமதமாகுமென படையினர் தெரிவிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை நகரில் படையினரின் எண்ணிக்கையைக் குறைப்பது மற்றும் புத்தர்சிலை விவகாரம் தொடர்பாக அடுத்த வாரமளவில் படை மற்றும் பொலிஸ் அதிகாரிகளுடனான சந்திப்பு ஒன்றுக்கு ஒழுங்கு செய்ய நடவடிக்கை எடுக்கவிருப்பதாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் திருகோணமலைத் தலைமைப் பிரதிநிதி ஆர்தர் வீற்றன் தம்மிடம் தெரிவித்ததாக திருகோணமலை மாவட்டத் தமிழ்மக்கள் பேரவைத் தலைவர் வ. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகல் இரண்டு மணியளவில் கண்காணிப்புக்குழுவின் திருமலை அலுவலகத்தில் கண்காணிப்புக்குழுத் திருமலைப் பிரதிநிதி வீற்றனின் அழைப்பின் பேரில் விக்னேஸ்வரன் அவரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## நெல் ஏற்றுமதிக்கான தீர்வை விலக்கு

வன்னியில் மிகையாகவுள்ள நெல்லைச் சந்தைப்படுத்தும் நோக்குடன் நெல் ஏற்றுமதிக்கு அறவிடப்பட்டுவந்த ஏற்றுமதித்தீர்வையை 2005.08.10 ஆம் நாளிலிருந்து 2005.10.31 ஆம் நாள் வரை நீக்கியுள்ளதாக வருவாய்ப்பகுதி அறிவித்துள்ளது. தென்பகுதிக்கு நெல்லை ஏற்றிச் செல்லும் ஊர்திகள் மீது சுமையுந்துக் கட்டணம் அறவிடப்படுவதில்லை. இது இவ்வாண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் நாளிலிருந்து நடைமுறையிலுள்ள தென்பதையும் வருவாய்ப்பகுதி அறியத்தந்துள்ளது.

## விடுதலைப் போராட்டத்தின் இலக்கை மக்கள் எழுச்சி மூலமே அடையலாம்

### அரச பணியாளர்களுடனான சந்திப்பில் தூயவன் அரசறிவியல் கல்லூரி முதல்வர்

(கிளிநொச்சி)

ஒரு விடுதலைப் போராட்டத்தின் இலக்கு மக்கள் எழுச்சிமூலமே அடையமுடிகிறது என தூயவன் அரசறிவியல் கல்லூரி முதல்வர் அரசண்ணா தெரிவித்தார்.

நேற்றுக் கிளிநொச்சியில் இடம் பெற்ற அரச பணியாளர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; எமது விடுதலைப்போராட்டம் போரின் மூலம் தனது புலத்தை நிலை நிறுத்தி சமாதானச் சூழலுக்குள் நுழைந்தது.

சமாதானச் சூழல் ஏற்பட்டு மூன்றரையாண்டுகள் கடந்த நிலையிலும் தமிழ்பேசும் மக்கள் எந்தவித முன்னேற்றங்களையும் இலக்குகளையும் அடையவில்லை.

சமாதானச் சூழல் தமிழ்மக்களின் பலத்தை சிதறடித்துவிடக்கூடாது. பலமான நிலையில் இருக்கவேண்டும் தமிழீழ விடுதலைப் புலிகள் போரில் மட்டுமல்ல அரசியல் ரீதியாகவும் சர்வதேச சமூகத்தைக் கவர்ந்துள்ளனர்.

குறிப்பாக ஆழிப்பேரலை ஏற்பட்ட சமயம் புலிகள் மேற்கொண்ட மீட்பு

(12ஆம் பக்கம் பார்க்க)

## இணுவிலில் இளைஞர் கொலையைக் கண்டித்து திருமலை, வவுனியாவில் துக்கம் அனுஷ்டிப்பு!

யாழ்ப்பாணம் இணுவிலில் வைத்து இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டதைக் கண்டித்தும் இராணுவத்தினர் சமாதான விரோதப் போக்கில் போவதாகக் கூறியும் நேற்று வவுனியாவில் கதவடைப்புப் போராட்டம் இடம்பெற்றது. இதற்கான அழைப்பு வடக்கு கிழக்கு மாகாண சிகை அலங்கரிப்பு ஊழியர் சங்கத்தினரால் விடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை திருகோணமலை நகரிலும் இராணுவத்தினரால் இணுவிலில் இளைஞர் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து, துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது. பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

## வீரவணக்கம்

நேற்று முன்தினம் சுகயீனம் காரணமாக நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

நாட்டுப்பற்றாளர் - இராசநாயகி அம்மா

(பரிமளராசா - இராசநாயகி கேவில் முள்ளியான் வடமராட்சி கிழக்கு) என்பவரே சாவடைந்தவராவார்.

31.07.2005 அன்று தவறுதலான

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிளி. மாவட்ட அழகக சங்கம் இன்று துக்கதினம் அனுஷ்டிப்பு

(அலுவலக செய்தியாளர்)

இணுவில் பகுதியில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையத்தில் படையினரின் துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டமையைக் கண்டித்து கிளிநொச்சி மாவட்ட அழகக சங்கத்தினர் இன்று துக்கதினம் அனுஷ்டிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சகல அழகக நிலையங்களும் மூடப்பட்டு நிலையங்களுக்கு முன்பாக கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டு துக்கதினம் கடைப்பிடிக்கப்படவிருப்பதாக கிளிநொச்சி மாவட்ட அழகக சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

(கு.தீ)

## வரி விளம்பரம்

### தயவு கூர்ந்து ஒப்படைக்கவும்

வவுனியாவில் வசித்து வரும் அந்தோனிப்பிள்ளை மரிய கொறட்டீன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை இல.515330216V இராணுவ அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் அடங்கிய மணிப் பேர்ஸ் ஒன்று கடந்த மாதம் கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள். தயவுகூர்ந்து ஈழநாதம் பணிமனையிலோ அன்றி பேருந்து நிலையத்திலோ ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். தகவல்:- மரிய கொறட்டீன். (6409)

### தவறிவிட்டது

கந்தையா சிவானந்தசிறி என்பவரது அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், பயண அனுமதி அட்டை என்பன 07.08.2005 கிளிநொச்சி நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது சேரன் வாணிபத்தில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றனர். (6528)

### விற்பனைக்குண்டு

தற்போது பாவனையிலுள்ள 15KW மின்பிறப்பாக்கி விற்பனைக் குண்டு. Denyo- Japan sound proof model-15 KW சொலிற்ஸ்ராட் மின்பிறப்பாக்கி தொடர்புக்கு. மு.அனுரதன், 2 ஆம் குறுக்குத் தெரு, செம்மலை, முல்லைத்தீவு. (6197)

## மாகாணசபை செயலாளர் நியமனம்

இலங்கை திட்டமிடல் சேவையின் வகுப்பு ஒன்றைச் சேர்ந்த வடக்கு கிழக்கு மாகாணதிட்டமிடல் பிரதிப்பிரதம செயலாளர் வி.எஸ்.சுவாமிநாதன் வடக்கு கிழக்கு மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு சமூகநலத்துறை மகளிர் விவகார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டு பதவியேற்றுள்ளார்.

வடக்கு கிழக்கு ஆளுநர் டிரான் பெர்னாண்டோ அவர்களால் இந்நியமனம் செய்யப்பட்டுள்ளது.

## புது. பொன்னம்பலம் மருத்துவமனையில் நாளை பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை

(புதுக்குடியிருப்பு)

நோர்வே நாட்டிலிருந்து வருகை தந்திருக்கும் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணர் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள மருத்துவர் பொன்னம்பலம் நினைவு மருத்துவ மனையில் நாளை காலை 8.00மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை தோலில். உடல் அமைப்பில் பிரச்சினைகள் உள்ள நோயாளர் களைப் பார்வையிட்டு சிகிச்சை வழங்கவுள்ளார்.

குறிப்பாக போர், எரிகாயங் களினால் ஏற்பட்ட, தழும்புகள், நீண்ட காலம் மாறாத புண் உள்ளவர்கள் சொண்டுப்பிளவு. அண்ணப்பிளவு போன்ற பாதிப்பு உள்ளவர்களுக்கு சத்திரசிகிச்சை வழங்கப்படவுள்ளது. பயன்பெற விரும்புவோர் புதுக் குடியிருப்பு மருத்துவர் பொன்னம் பலம் நினைவு மருத்துவமனையின் வெளிநோயாளர் பகுதியினை தொடர்புகொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது.


மலேரியா கட்டுப்பாட்டு மேற்பார்வை உத்தியோகஸ்தர்
திரு.வே.சிறீதரன் அவர்களின்

“முதலுதவி”

நூல் வெளியீட்டு விழா

காலம்:- 10.08.2005 புதன்கிழமை பி.ப 3 மணி
இடம்:- கலாச்சார மண்டபம், கிளிநொச்சி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நலன் புரிச்சங்கம்,
மலேரியா தடைப்பகுதி,
கிளிநொச்சி.

(6529)


## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



அமரர்
இராமையா அன்னலட்சுமி

இல 311 உதயநகர் மேற்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் 09.08.2005 (செவ்வாய்க்கிழமை) இன்று அந்தியேட்டி வீட்டுக் கிருத்தியம் நடைபெறும். அத்தோடு மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்

தகவல்:-
மருமகன் த. சோழமுத்து (வடைஐயா),
(நோ. ந. சங்கம் கிளிநொச்சி),
பேரன் சோ. ரஞ்சித்குமார்,
குடும்பத்தினர்.

(6530)


தமிழீழ தேசியத்தொலைக்காட்சி
KU Band இல்

தினமும் தமிழீழ நேரம் இரவு 8.00 மணி முதல் 9.00 மணி வரை.




தென்கிழக்கு ஆசியாவிற்கு
ஆகஸ்ட் 1ம் திகதி முதல் ஒளிபரப்பாகிறது

தொழிநுட்பத் தகவல் :
Satellite : Europe Star (1) Ku 45° E
Azimuth : 258°
Frequency : 11056 Mhz
Symbol rate : 2.894MS/s
Polarity : Vertical
FEC : 3/4

தொடர்புகளுக்கு :
தமிழீழ தேசிய தொலைக்காட்சி,
தொடர்பகம்,
மத்திய கல்லூரி முன்பாக,
யாழ்சாலை,
கிளிநொச்சி,
தமிழீழம்.

(சி.12502)

மின்னஞ்சல் : info@tamilntt.com T.P. No: 0212285816

# மோசமான மேகமூட்டம் காரணமாக டிஸ்கவரி பூமிக்குத் திரும்புவதில் தாமதம்

(புளோரிடா)


**அமெரிக்க விண்வெளி ஓடமான டிஸ்கவரி தனது 13 நாள் பயணத்தை வெற்றிகரமான முறையில் முடித்துக் கொண்டு பூமிக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றது.**


நேற்று இந்திய நேரப்படி பிற்பகல் 2.16 மணியளவில் பூமியை வந்தடையும் எனத் தெரிவித்த போதும் அடர்ந்த மேகக் கூட்டம் காரணமாக 24 மணி நேரம் தாமதமாகவே வந்தடையும் என புளோரிடாவிலுள்ள கெனடி விண்வெளி ஆய்வு நிலையத்திற்கு நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்ட டிஸ்கவரி ஓடம் விண்வெளி ஆய்வு நிலையத்திலுள்ள வீரர்களுக்கு தேவையான பொருட்களையும் ஆய்வு சாதனங்களையும் எடுத்துச்சென்றது.

விண்ணுக்குச் செல்லும் போது டிஸ்கவரி விண்வெளி ஓடத்தில் பழுது ஏற்பட்டதையடுத்து தரைக் கட்டுப்பாட்டு விஞ்ஞானிகளின் உதவியுடன் விண்வெளி வீரர்களால் கோளாறுகள் சரிசெய்யப்பட்டன.

கடந்த சனிக்கிழமை விண் வெளியிலுள்ள சர்வதேச ஆய்வு நிலையத் திலிருந்து பிரிந்து டிஸ்கவரி ஓடம் பூமிக்குப் புறப்பட்டது. விண் வெளி நிலையத்தை ஒரு சுற்று வந்து படம் பிடித்து விட்டு மீண்டும் பூமியை நோக்கி மணிக்கு சுமார் 29 ஆயிரம் கிலோமீற்றர் வேகத்தில் பூமியை நோக்கி வந்து கொண்டிருந்தது. எனினும் மோசமான காலநிலை காரணமாக பூமிக்கு தாமதமாகவே வந்து சேரும் என நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.





சீனாவில் சாங்காய் பகுதியில் பெய்த பலத்த மழை காரணமாக வெள்ளத்தில் சிக்கிய வானொன்று மீட்கப்படுகிறது.




பஸ்ராவில் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் எரிந்து சேதமான பிரிட்டன் இராணுவ வாகனத்தை அடித்து நொருக்கும் இளைஞர்கள்.

# லண்டன் குண்டுவெடிப்பு எதிரொலி 500 முஸ்லிம்கள் நாட்டை விட்டு வெளியேற்றம்

(லண்டன்)

லண்டனில் கடந்த மாதம் ஏழாம் திகதியும் 21 ஆம் திகதியும் சுரங்க ரயில்களில் தொடர் குண்டுகள் வெடித்ததில் 56பேர் பலியானார்கள். வெடிகுண்டுத் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் பாகிஸ்தானில் பயிற்சி பெற்றவர்கள் என்றும் விசாரணையில் தெரியவந்தது.

இந்த நிலையில் இங்கிலாந்தில் மீண்டும் ஒரு குண்டு வெடிப்பு ஏற்படாமல் இருக்க இங்கிலாந்திலுள்ள முஸ்லிம் அடிப்படைவாதிகளையும், பழமைவாதிகளையும் சில முஸ்லிம் தலை வர்களையும் நாட்டை விட்டு வெளி யேற்ற பிரதமர் ரொனிபிளேயர் முடிவு செய்துள்ளார்.

நாட்டை விட்டு வெளியேற்றப்பட வேண்டிய 500 முஸ்லிம் தலைவர்கள் பட்டியலை இங்கிலாந்து நிர்வாகம் தயாரித்துள்ளது. படிப்படியாக இவர்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்படுவார்கள்.

அடுத்த மாதம் 100 பேர் அனுப்பி வைக்கப்படுவார்கள். இந்த நிலையில் இங்கிலாந்தில் இயங்கும் 150 இஸ்லாமிய பள்ளிகளின் நிர்வாகத்தை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர இங்கிலாந்து அரசு முடிவு செய்துள்ளது. இனி அந்தப் பள்ளிகள் சுயமாக இயங்க முடியாது எனவும் அறியவருகிறது.

# தாய்மாருக்கு வித்தியாசமான போட்டி



ஹொங்கொங்கில் தாய்மார்களுக்கான வித்தியாசமான போட்டி நடைபெற்றது. குழந்தைகளுக்கான சாதனங்களை தயாரிக்கும் நிறுவனம் சார்பில் நடந்த இந்தப் போட்டியில் 100 குழந்தைகளும் அவற்றின் தாய்மார்களும் கலந்து கொண்டனர்.

குழந்தைகளை 'மசாஜ்' செய்து தாலாட்டி தூங்க வைக்க வேண்டும். யார் முதலில் நன்றாக அதிக நேரம் தூங்க வைக்கிறார்களோ அவர்களுக்கு பரிசு கிடைக்கும். தூங்காமல் கொட்டக் கொட்ட விழிக்கும் குழந்தைகளை கொண்டு வந்த தயார்மார்கள் தான் இதில் அதிகம்.

# மாவோயிஸ்ட் தீவிரவாதிகளால் 150 பெண்கள் கடத்தப்பட்டனர்

(காத்மண்டு)

நேபாளத்தில் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் ஒரே நாளில் 223 பேரைக் கடத்திச் சென்றுள்ளனர். இவர்களில் 150 பேர் பெண்கள். நேபாளத்தின் மேற்குப பகுதியில் உள்ள மூன்று மாவட்டங்களில் நான்கு கிராமங்களை தீவிரவாதிகள் சுற்றிவளைத்தனர். துப்பாக்கி முனையில் 223 பேரையும் தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர். பஜூரா கிராமத்தில் மட்டும் 70 பேர் கடத்தப்பட்டனர்.

கடத்தப்பட்ட அந்தக் கிராம வாசிகளுக்கு இரகசிய இடத்தில் தீவிரவாதிகள் பயிற்சி கொடுத்து தங்கள் இயக்கத்தில் சேர்த்துக்கொள்கிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.



ஜப்பான் கிரோஷிமா, நாகசாகி நகரங்களில் நடத்தப்பட்ட அணுகுண்டுத் தாக்குதலில் பலியானவர்களின் நினைவாக தனது பேரப்பிள்ளையுடன் பிரார்த்தனையில் ஈடுபடும் ஜப்பானியர் ஒருவர்.

# சதித்திட்டம் தீட்டியதாக தீவிரவாதி ஒருவர் மீது வழக்கு

(லண்டன்)

லண்டனில் கடந்த மாதம் 21 ஆம் திகதி ரயில் நிலையங்களிலும் பேருந்திலும் குண்டு வைத்ததாக நான்கு தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் யாசின் ஹாசன் ஓமர். 24 வயதான இவர் மீது லண்டன் நகரப் பயணிகளைக் கொல்ல சதித்திட்டம் தீட்டியதாக வழக்குட் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக வெடி மருந்துகளை தயாரித்ததாகவும், அதன் மூலம் பொதுமக்களின் உயிருக்கும் உடமைக்கும் ஆபத்து ஏற்படும் வகையில் வெடிமருந்துகளை வைத்திருந்ததாகவும் இரண்டாவது குற்றச்சாட்டும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# சார்ஸ் நோய்க்கு தடுப்பூசி சீன வைத்தியர்கள் கண்டுபிடிப்பு

சார்ஸ் நோய் பரவுவதை தடுக்க புதிய ஊசி மருந்தொன்றை சீன நாட்டு வைத்தியர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்தப் புதிய மருந்து குரங்குகளுக்கு கொடுத்து சோதனை செய்து பார்த்ததில் நல்ல பலனைக் கொடுத்துள்ளது. அடுத்து மனிதர்களுக்கும் இதை சோதனை அடிப்படையில் கொடுக்க சீன அரசு ஒப்புதல் வழங்கி இருக்கிறது. இந்தச் சோதனை முடிந்ததும் அதிக அளவில் இந்தத் தடுப்பு மருந்தை தயாரிக்க அனுமதி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.




பகுபிக்கா. லில் மூன்று நாட்களாக தத்தளித்து மீட்கப்பட்டு கமசட்கி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட தனது கணவரான யாச்சஸ்லவ் மிலசிவ்ஸ்கியை பார்வையிடக் காத்திருக்கும் அவரது மனைவி யெலினாவும் உறவினர்களும்.

# இங்கிலாந்தின் முன்னாள் வெளிநாட்டு அமைச்சர்மரணம்

(லண்டன்)

இங்கிலாந்தின் முன்னாள் வெளிநாட்டு அமைச்சர் ராபின் குக் (வயது-59) மாரடைப்பால் மரணமடைந்துள்ளார் அவர் ஸ்கொட்லாந்தில் ஒரு மலையில் மனைவி கய்னார் உடன்நடைப் பயிற்சி செய்தபோது மயங்கி விழுந்து மரணமானார். ரொனிபிளேயர் அமைச்சரவையில் வெளிநாட்டு அமைச் சராக இருந்த இவர், ஈராக் போர் காரணமாக அமைச்சர் பதவியிலிருந்து இராஜினாமா செய்தவர் என்பது குறிப்பிடததககது.






லண்டனில் நடைபெற்ற குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்ட நான்கு சந்தேகநபர்கள் நீதிமன்றத்துக்கு அழைத்து வரவிருந்த நிலையில் சம்பவம் நடந்த இடத்தில் பலியானவர்களின் நினைவாக நினைவுச்சின்னம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.



ஜேர்மனியில் கடந்த 31ஆம் திகதி நடைபெற்ற கரும்புலிகள் நாள் நிகழ்வின் பதிவுகள்.

# இன்று நூல் வெளியீட்டு விழா

மாவீரர் இரண்டாம் லெப். ஈழராசன் (நீதிவளவன்) அவர்களின் "விழுதொன்றின் குரல்'' அல்லது "மனிதம்புரிதல்'' எனும் நூல் வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி நூல் வெளியீட்டுவிழா கடந்த மாதம் 27ஆம் திகதி நடைபெறவிருந்து தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# துவிச்சக்கரவண்டிகளில் பக்கம் பக்கமாக செல்வோர் மீது காவல்துறையினர் நடவடிக்கை

(விசுவமடு)

பரந்தன் - முல்லைத்தீவு நெடுஞ்சாலையில் பக்கம் பக்கமாக துவிச்சக்கர வண்டிகளில் செல்வோர் மீது விசுவமடு காவல்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு ஓட்டிச் செல்பவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொண்டு அந்த இடத்திலே தண்டப் பணம் அறவீடு செய்கின்றமையால் பக்கம் பக்கமாக துவிச்சக்கரவண்டிகளில் செல்வோர் தொகை குறைந்துள்ளது.

கடந்த காலங்களில் இப்படியான பக்கம் பக்கமாக துவிச்சக்கரவண்டிகளைச் செலுத்துவதனால் வீதி விபத்துக்கள் அதிகரித்திருந்தது.

ஆனால், தற்பொழுது காவல் துறையினரின் இந்நடவடிக்கையால் வீதி விபத்துக்கள் குறைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. (46)

# முல்லையில் சமுதாயஅபிவிருத்தித் திட்டத்தின் கீழ்

# 36 கரையோர கிராமங்கள் புனரமைக்க ஏற்பாடு

(முல்லை)

**முல்லைத்தீவில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட 36 கரையோரக் கிராமங்கள் வடகிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தி திட்டத்தினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் அபிவிருத்திசெய்யப்படவுள்ளதாக வ.கி.ச.அ.திட்டப் பிரதிதிட்டப்பணிப்பாளர் ந.சிவலிங்கம் தெரி வித்தார்.**

அவர்மேலும் தெரிவிக்கையில்; 30 கிராமங்கள் கரைதுறைப் பற்றிலும், ஆறு கிராமங்கள் புதுக்குடியிருப்பிலுமாக இந்தச் சுனாமி மீள்கட்டுமானத் திட்டம் நடைபெறவுள்ளது.

30 கிராமங்களில் விசேடமாக 18 கிராமங்கள் தரப்பட்டுள்ளதாகவும் அதில் பத்து கிராமங்களின் உட்கட்டுமான அதிமுக்கிய வேலைகள் மக்கள் மூலமாக இனங்காணப்பட்டு ஒரு கிராமத்திற்கு ரூபா 50 இலட்சம் வீதம் வழங்கப்படவுள்ளதாகவும், இரண்டாவதாக அந்தந்த கிராமமக்களின் தொழில் துறையினை ஊக்குவிப்பதற்கான பயிற்சி வகுப்புக்கள் மற்றும் சுழற்சிமுறை சிறுகடன் அடிப்படையில் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவில் 50 இலட்சம்ரூபா வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார் மேலும் சூழல்பாதுகாப்பும் கடல் அரிப்பை தடுப்பதற்குமான நடவடிக்கைக்கு 25 இலட்சம் தொடக்கம் 50 இலட்சம்வரை வழங்கப்படவுள்ளது.

அத்துடன் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களை இனங்கண்டு அவற்றினூடாகப்பயிற்சி வழங்குவதோடு ஊக்குவிப்பதற்காக ரூபா இரண்டரைஇலட்சம் வழங்கப்படவுள்ளது. இந்த நிறுவனங்கள் கூடுதலாக பெண்களை ஊக்குவிப்பதாக அமையவேண்டும் இத் திட்டமானது சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மூன்று வருடங்களுக்கு அமுல்படுத்தப்படும். ஏனைய திட்டம் அடுத்துவருகின்ற நான்காவது ஆண்டிலிருந்து நடைபெறும் எனவும் மேலும் தெரிவித்தார். (20)

# கல்வியின் முக்கியத்துவம் தொடர்பாக பெற்றோர்களுக்கு விழிப்புணர்வூட்டல்

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேச பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினரின் ஏற்பாட்டில் முள்ளியவளை கிழக்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்களுக்கான கல்வியின் முக்கியத்துவம் பற்றிய கல்வி விழிப்புணர்வுக் கருத்தமர்வு இடம்பெற்றது.

முள்ளியவளை கிழக்கு கிராம முன்னேற்ற சங்க மண்டபத்தில் முள்ளியவளைப் பிரதேச பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் செல்வி.சோ. கலாமலர் தலைமையில் அண்மையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிள்ளைகளின் கல்வியிலும், பொதுக் கல்வியிலும் பெற்றோர்களின் பங்களிப்பு, பிள்ளைகளை கற்றலுக்கு உட்படுத்த பெற்றோர்களுக்கு ஏற்படும் பிரச்சினைக்கான தீர்வு, பிள்ளைகளின் கல்விக்கான பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பான சிறந்த கருத்துக்களை முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன நிகழ்ச்சி திட்டமிடல் இணைப்பாளர் செல்வி. மு. அனுசா, முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி தொழில்நுட்ப ஆசிரியர் சுந்தரலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்.

மேற்படி நிகழ்வில் 100இற்கும் மேற்பட்ட பெற்றோர்கள் கலந்து கொண்டனர். அசமந்த போக்குடன் பிள்ளைகளை கற்றலில் ஈடுபடுத்திய சில பெற்றோர்கள் விழிப்புணர்வுடன் சென்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## மன்னார்-புதுக்கமத்தில்

# பொதுநோக்கு மண்டபம், முன்பள்ளி திறந்துவைப்பு

(மன்னார்)

மன்னார் புதுக்கமம் கிராமத்தில் ஜப்பான் தொண்டு நிறுவனமான "ஜய்க்கா'' நிறுவன நிதியுதவியுடன் 30 இலட்சம் ரூபா செலவில் முன்பள்ளி ஒன்றும், பொது நோக்கு மண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டு கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளன.

காலை 10.00 மணிக்கு மன்னார் மாவட்ட இணைப்பாளர் அவர்களினால் மேற்படி கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இந் நிகழ்வில் மன்னார் மாவட்ட அரச அதிபர் விஸ்வலிங்கம், மன்னார் பிரதேச செயலாளர் நந்தினி ஸ்ரானி டிமெல்குரூஸ், புதுக்கமம் கிராம அலுவலர் மற்றும் கிராம மக்கள் பலரும் கலந்து கொண்டனர். (18)

# மட்டு.,அம்பாறையில் கடும்வெப்பத்தினால் இடைத்தங்கல் முகாம்களில் வாழ்வோர் அவலம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் தற்போது நிலவும் கடும் வெப்பம் காரணமாக இடைத்தங்கல் முகாம்களில் வதியும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தகடு, வேயப்பட்ட தற்காலிக வீடுகள் மற்றும் கூடாரங்களில் வதியும் மக்கள் பகல் வேளைகளில் வெயிலில் அவதியுறுவதுடன் குறிப்பாக குழந்தைகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

சுனாமிப் பேரலையினால் நிழல் தரும் மரங்கள் வேருடன் பிடுங்கப்பட்ட அதேவேளை அதிகளவிலான மரங்களின் இலைகள் உதிர்ந்த நிலையில் காணப்படுவதும் வெயில் கொடுமைக்குக் காரணம் எனத்தெரிவிக்கப்படுகிறது.

# வீரமுரசு வார அரங்கு

(முல்லை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வீரமுரசு வார அரங்கு ஆறுமுகத்தான்குளம் அ.த.க.பாடசாலை மைதானத்தில் கடந்த சனியன்று மாலை 6.00 மணிக்கு மேற்படி பாடசாலை ஆசிரியர் மாலா தலைமையில் ஆரம்பமானது.

பொதுச்சுடரினை மாவீரர் மேஜர் கரனின் மனைவி மற்றும் திருமதி. சின்னையா ஆகியோர் ஏற்றினார்கள்.

தொடர்ந்து மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு ஈகச்சுடரேற்றி மலர் மாலைகளை மாவீரர்களின் பெற்றோர்கள் அணிவித்தார்கள்.

தொடர்ந்து சிறப்புரைகளை பாராளுமன்ற உறுப்பினர் ச. கனகரத்தினம், முல்லை.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன், தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

இந்நிகழ்வில் முல்லை. மாவட்ட ஊரக வளர்ச்சிப் பணிப் பொறுப்பாளர் குமரன், முல்லை. மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வம், கிராமமக்கள், போராளிகள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

## அன்பளிப்பு

சோதனைச் சாவடிக் கூடாகப் பயணிக்கும் நோயாளர்கள், வலது குறைந்தோருக்கு சோதனைச் சாவடியில் உதவும் பொருட்டு நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினால் இரண்டு நோயாளர் சக்கர நாற்காலிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

# பாதுகாப்பு நடவடிக்கைகள் எனும் போர்வையில் சோதனைச்சாவடிகளில் படையினர் கெடுபிடி!

மட்டக்களப்பில் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்னும் போர்வையில் சிறிலங்காப் படையினர் சோதனைச்சாவடிகளில் விரும்பத்தகாத வேதனைக்குரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். சோதனைச் சாவடிகளில் அதிகமான வீதித் தடைக் குறுக்குக் கட்டுகளைப் போடுவதும், தகரப் பீப்பாக்களினையும், கம்பிச் சுருள்களையும், தடைக்கட்டைகளையும் போட்டு வீதியில் மக்கள் போக்குவரத்துக்கு பாதகமான சூழ் நிலைகளை உருவாக்குவதும் மக்களையும், பிரயாணிகளையும், வாகன உரிமையாளர்களையும் மற்றும் பலரையும் வேதனைகளுக்கு உள்ளாக்கி விசனத்தை உண்டு பண்ணி வருகின்றனர்.

# இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்தால் மண்டைதீவு வைத்தியசாலை நிர்மாணம் பாதிப்பு

(மண்டைதீவு)

**இராணுவ அதியுயர் பாதுகாப்புவலய நடைமுறைகளால் மண்டைதீவு வைத்தியசாலை நிர்மாண வேலைகளைப் பொறுப்பேற்க எந்த ஒரு ஒப்பந்தகாரரும் முன்வராததால் இதன் புனர்நிர்மாணப்பணிகள் கைவிடப்பட்டுள்ளதாக பிரதி மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

மண்டைதீவு வைத்தியசாலையை புனர்நிர்மாணம் செய்வதற்காக உலக வங்கியால் ஐந்து மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. எனினும் மண்டைதீவில் சிறிலங்கா கடற்படையினரால் விதிக்கப்பட்டுள்ள இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலய நடைமுறைகளால் அந்நிதிமூலம் மண்டைதீவு வைத்தியசாலையை புனர்நிர்மாணம் செய்யமுடியாது போயுள்ளது.

சிறிலங்கா கடற்படையின் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயமாக உள்ள மண்டைதீவில் மீளக்குடியமர திரும்பியுள்ள குடும்பங்களின் வைத்திய சேவைகளைக் கவனத்தில் கொண்டு சேதமடைந்து இயங்க முடியாத நிலையில் இருக்கும் மண்டைதீவு வைத்தியசாலையை புனர்நிர்மாணம் செய்ய உலக வங்கி முதற்கட்டமாக ஐந்து மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்தது. எனினும் மண்டைதீவு வைத்தியசாலையும் அதன் சூழலும் இராணுவ பாதுகாப்பு வலயத்துள் இருப்பதை காரணம் காட்டி வைத்தியசாலை புனர் நிர்மாண நடவடிக்கைகளுக்கு செல்வோர் மீதும் பல நிபந்தனை கெடுபிடிகளை படையினர் விதித்துள்ளனர் எனவும் அவர் மேலும்தெரிவித்துள்ளார். (33)

# புனரமைக்கப்படாத நிலையில் புத்தூர் விக்னேஸ்வரா வீதி

(யாழ்ப்பாணம்)

புத்தூர் விக்னேஸ்வரா வீதி 30 வருடமாக புனரமைக்கப்படாது மிக மோசமான நிலையில் பாரிய குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. இதனால் இந்த வீதியால் பயணம்செய்யும் பொதுமக்களும் மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

புத்தூர் கிழக்கு மக்கள் பயன்படுத்தும் ஒரே பாதையாக இப்பாதையுள்ளது. இதேவேளை இந்த வீதியைப் புனரமைக்க பலதரப்பினரிடமும் வேண்டுகோள்விடுத்திருந்தபோதும் எதுவித முன்னேற்றமும் இருக்கவில்லை என மக்கள் பெரும் கவலை தெரிவித்துள்ளனர். (கீ)

# வட்டு.மத்திய கல்லூரியில் புதிய கட்டடம் திறப்பு

(வலி.மேற்கு)

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரிக்கு வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்புத் திட்டத்தின் கீழ் புதிய இரண்டு மாடிக் கட்டடம் ஒன்று நிறுவப்பட்டு, சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இக்கட்டடம் 130 அடி நீளமும் 25 அடி அகலமும்கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது இக்கட்டடத்தில் நூலகம், கணினிஅறை, அதிபர் அலவலகம், பிரார்த்தனை மண்டபம் ஆகியன இயங்குகின்றன. இக்கட்டடம் அமைக்கப்பட்டதன் மூலம் வட்டு. மத்திய கல்லூரியின் பௌதிக தேவைகள் 50 வீதம் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (37)

# பதிவாளர் திணைக்கள சேவை பிரதேச செயலர் பிரிவுகளுக்கு விஸ்தரிப்பு

(வலி.மேற்கு)

யாழ்.மாவட்ட பதிவாளர் திணைக்களம் தனது பணிகளை இம்மாதம் தொடக்கம் புதிதாக நான்கு பிரதேச செயலர் பிரிவுகளுக்கு விஸ்தரிக்க இருப்பதாக யாழ். மாவட்ட மேலதிக பதிவாளர் பொ. ஈஸ்வரதாசன் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் மாவட்ட செயலகங்களுடன் இயங்கி வந்த பதிவாளர் திணைக்களப் பிரிவுகள்- இனிவரும் காலங்களில் பிரதேச செயலர் பிரிவு மட்டங்களிலும் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ் விஸ்தரிப்பு பணிகள் தென் பகுதிகளில் நடைமுறைக்கு வந்த போதிலும் வடக்கின் அசாதாரண நிலைமைகள் காரணமாக அவை இங்கு விஸ்தரிக்கப்படவில்லை.

தற்போது, நிலவும் சமாதான சூழலைப் பயன்படுத்தி வடக்கிலுள்ள பிரதேச செயலகங்களுக்கும் இவை விஸ்தரிக்கப்படவுள்ளன.

முதற்கட்டமாக சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, கோப்பாய் போன்ற நான்கு பிரதேச செயலர் பிரிவுகளுக்கு இப்பதிவாளர் பணிகள் விஸ்தரிக்கப்படவுள்ளன.

பொதுமக்கள் தத்தம் பிரதேச செயலர் பிரிவுகளில் வைத்தே பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவுச் சான்றிதழ்களைப் பெறலாம் என்றும் சான்றிதழ்களில் திருத்தங்களை மேற்கொள்ளும் பணிகளுக்கும் மாவட்ட அலுவலகத்தை நாட வேண்டிய தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார். (37)

# அரச உத்தியோகத்தர்கள் தமிழ்மொழியை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்

## –யாழ். அரச அதிபர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தமிழ் மொழியை முழுமையாக அரச உத்தியோகத்தர்கள் பயன்படுத்த வேண்டும் இதனை விடுத்து சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் படிவங்களை நிரப்புவதையும் செயற்படுத்துவதையும் அரச உத்தியோகத்தர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் பணிப்புரைவிடுத்துள்ளார்.

யாழ்மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்களுக்கான சுற்று நிருபங்களை, அறிவுறுத்தல்களை அமைச்சின் செயலாளர்கள் தனிச் சிங்களத்திலேயே தொடர்ச்சியாக அனுப்பி வருகின்றார்கள்.இதன் காரணமாக பொதுமக்களிடத்தில் படிவங்களை சிங்களத் தில் நிரப்பும் படியோ அன்றி ஆங்கிலத்தில் நிரப்பும் படியோ அரச உத்தியோகத்தர்கள் வலியுறுத்த முடியாது.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் தமிழ் மொழியிலேயே அனைத்துக் கடமைகளும் இடம் பெற வேண்டும். இந்த வகையில் தமிழ் மொழியின் உபயோகத்தை அரச உத்தியோகத்தர்கள் கடைப்பிடிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பல அரச திணைக்களங்களில் தற்போது பல படிவங்களும் ஆங்கிலத்தில் வழங்கப்பட்டு வருவதுடன் வங்கிகளினால் வழங்கப்படும் கடிதங்களும் கூடஆங்கிலத்திலேயே அனுப்பப்பட்டு வருகின்றமையும் தென்னிலங்கையில் இருந்து வரும் அரச கடிதங்களும் கூட தனிச் சிங்களத்திலேயே அனுப்பப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (41)

# யாழ்.காங்கேசன்துறை வீதியில் இராணுவ உந்துருளி ரோந்து அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-காங்கேசன்துறை வீதியில் இராணுவத்தினர் இரவு வேளைகளில் தமது அதிவேக உந்துருளி (பீல்ட்பைக்) ரோந்து நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

அண்மையில் இணுவில் பகுதியில் இராணுவச்சிப்பாய் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தையடுத்து அங்கு ஏற்பட்ட அசம்பாவிதங்களைத் தொடர்ந்தே இந்த அதிவேக உந்துருளி ரோந்து நடவடிக்கைகளை இராணுவத்தினர் ஆரம்பித்துள்ளனர்.

வாய்களை கறுப்புத்துணியால் கட்டியவாறு கனரக ஆயுதங்கள் சகிதம் சுமார் 15 இற்கும் மேற்பட்ட அதிவேக உந்துருளிகளில் இராணுவத்தினர் இரவு வேளைகளில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த சில நாட்களாக இரவு வேளைகளில் இராணுவத்தினர் மேற்கொள்ளும் இவ் இரவு நேர ரோந்துகளால் பொதுமக்கள் வீதிகளில் நடமாட அச்சம் தெரிவித்துள்ளனர். (33)

# மயக்க மருந்துவைத்திய நிபுணர் இல்லை; மகப்பேற்று சிக்ச்சை பெரிதும் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

மயக்கமருந்து சிகிச்சை வழங்கக் கூடிய நிபுணர் ஒருவர் கூட நியமிக்கப்படாமை காரணமாக யாழ். மந்திகை வைத்தியசாலையின் மகப்பேற்று சிகிச்சைப்பிரிவின் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

மகப்பேற்றுச் சிகிச்சையின் போது சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவோருக்கு மயக்கமருந்தளிக்கப் படுவது அவசியமானதாகும். எனினும் மந்திகை மருத்துவமனையில் மயக்கமருந்து சிகிச்சை நிபுணர் பதவிக்கு தகுதிவாய்ந்த நிபுணர் எவரும் நியமிக்கப்படவில்லை.

இதனால் மந்திகை வைத்தியசாலைக்கு மகப்பேற்றுக்காக வரும் கர்ப்பிணித்தாய்மார்களை யாழ். போதனாவைத்தியசாலைக்கே அனுப்பிவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந் நிலைமையை மந்திகை வைத்தியசாலை பொறுப்பதிகாரிகள் சுகாதாரசேவைகள் திணைக்களத்திடமும், அரசாங்கத்திடமும் சுட்டிக் காட்டி மந்திகைவைத்தியசாலைக்கு மயக்க மருந்து சிகிச்சை நிபுணர் ஒருவரை நியமிக்கக் கோரி வருகின்ற போதும் எவரும் இதனைக் கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்கவில்லை.

இதனால் மந்திகை மருத்துவமனையின் மகப்பேற்று சிகிச்சைப் பிரிவின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. (33)

# இணுவில் சம்பவ விவகாரம்: மக்களை மிரட்டும் படைத்தரப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இணுவில், பாலாவோடை கிராமமக்களை மிரட்டி பொலிஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தனவின் கொலை தொடர்பான தகவல்களைத் திரட்டும் முயற்சியில் பொலிசாரும், இராணுவப் புலனாய்வுத் துறையினரும் ஈடுபட்டுள்ளனர்.

சாள்ஸ் விஜேவர்த்தன சடலமாக மீட்கப்பட்ட பாலா வோடை கிராமத்துக்கும் அதனை அண்டியுள்ள கிராமங்களுக்கும். செல்லும் பொலிசாரும் புலனாய்வுத் துறையினரும் பொது மக்கள் மீது கடுமையான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்போது சாள்ஸ் விஜேவர்த்தனவின் கொலைச் சம்பவம் பற்றிய தகவல் எதுவும் அப்பகுதி மக்களிடம் இருந்து கிடைக்கும் எனப் படையினர் எதிர் பார்க்கின்றனர்.

இதனால் சடலம் மீட்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர். அத்துடன் தகவல் தரவற்புறுத்தும் பொலிசாரின் செயற்பாடுகள் குறித்து அவர்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

# அறிவிப்பு பலகைகளில் சுவரொட்டிகள்: அகற்றும்படி பொதுமக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை பகுதிகளின் அறிவிப்பு பலகைகளில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளை அகற்ற பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாநகரசபை மற்றும் நகரசபை பிரதேசபை பகுதிகளில் ஊர், இடங்கள்,தூரம் குறித்து வைக்கபட்டுள்ள அறிவிப்புப் பலகைகளில் பல்வேறுவர்ண சுவரொட்டிகள் ஒட்டபட்டுள்ளதால் புதிதாக வருபவர்கள் பெரும் சிரமங்களை சந்திக்கின்றனர்.

பல இடங்களில் அறிவிப்பு பலகைகளில் எழுதப்பட்ட பெயர்கள் அழிந்து தெளிவற்று காட்சியளிக்கின்றன. இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளைகவனம் செலுத்தும்படி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (28)

## சேவை விரிவு

(வலி.மேற்கு)

இலங்கை வங்கியின் காரைநகர்க் கிளைதனது சேவைகளை எதிர்வரும் வாரத்திலிருந்து விரிவுபடுத்தவுள்ளது இதன்படி,விவசாயிகள்மற்றும் வாடிக்கையாளர்களுக்கான கடன் வசதித் திட்டங்களை அறிமுகப்படுத்துதல், தங்க நகை அடகு பிடித்தல் போன்ற திட்டங்களை மேற்கொள்ளவுள்ளதாக இலங்கை வங்கியின் காரைநகர்க் கிளை முகாமையாளர் தெரிவித்துள்ளார். (37)

# யு.என்.எச்.சி.ஆர் உதவியுடன் 272 வீடுகள் அமைப்பு

யு.என் எச்.சி ஆர் நிறுவனத்தால் யாழ்.மாவட்டத்தில் 20 மில்லியன் ரூபா செலவில் 272 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இதற்கான அங்கீகாரத்தினை யாழ்.மாவட்ட அரச அதிபர் வழங்கியுள்ளார்.

யு.என்.எச்.சி. ஆர் நிறுவனத்தினால் அமைக்கப்படவுள்ள வீடுகள் யாழ். மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக இடம்பெயர்ந்து வாழ்கின்றவர்களுக்கும் வழங்கப்படவுள்ளதாகவும் இதற்கான வேலைத்திட்டங்கள் விரைவாக ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக யாழ்ப்பாணத்தில் 10 வீடுகளும் பருத்தித்துறையில் 20 வீடுகளும்தெல்லிப்பழை பிரதேசசபையில்53வீடுகளும்உடுவில் பிரதேச சபையில் 38 வீடுகளும் கோப்பாய் பிரதேச செயலர்பிரிவில் 37 வீடுகளும் மண்டை தீவில் 42 வீடுகளும் சண்டிலிப்பாய் பிரதேசசெயலர் பிரிவுகளில் 29 வீடுகளும், சங்கானையில் 49 வீடுகளும் புதிதாக அமைக்கப்படவுள்ளன. பருத்தித்துறை கிழக்கு பகுதியில் அமைத்துள்ள நலன்புரிநிலையங்களில் எட்டு மலசல கூடங்கள் புதிதாக அமைக்கப்படவுள்ளதோடு 130 மலசல கூடங்கள் புனரமைக் கப்படவுள்ளன. இதேவேளை 8.5 மில்லியன் ரூபாசெலவில் பத்து பொதுமண்டபங்கள் அமைக்கப்படவுள்ளன. இதில் ஐந்து பொதுமண்டபங்கள் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலும்ஏனையவை வேறு பிரதேச செயலர் பிரிவுகளிலும் அமைக்கப்படவுள்ளன. இடம்பெயர்ந்த மக்களது நலன்புரி நிலையங்களில் உள்ள 44 கிணறுகள் புனரமைக் கப்படவுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (க)

# தமிழக முதலமைச்சரின் தற்காப்பு நடவடிக்கை!

தமிழக முதலமைச்சர் ஜெயலிதா சொத்துக்குவிப்பு வழக்கிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்கான எத்தனங்களையே கூடுதலாக மேற்கொண்டு வருகின்றார். இதன் மூலம் அவர் தன்னை நிரபராதி என்று தமிழக மக் களுக்கு காட்டிக்கொள்ளவும் முயற்சிக்கின்றார். இவை எல்லாமே தமிழகத் தேர்தலை மையப்படுத்தித்தான் என்பதே உண்மையாகும்.

அந்தவகையில்தான் பெங் களூரில் விசாரணைகள் ஆரம்பமாகி நடந்துகொண்டிருக்கும் சொத்துக் குவிப்பு வழக்கைத் திசைதிருப்பும் முகமாக அவரது நடவடிக்கைகள் அமைந்திருப்பதாக எதிர்க் கட்சிகள் முணுமுணுக்கின்ற தையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இதற்குக் காரணமும் இல்லாமலில்லை. பெங்களூரில் சொத்துக்குவிப்புவழக்கோடு, லண்டனில் ஆடம்பர விடுதி வாங்கிய வழக்கும் சேர்த்தே விசாரணைகள் ஆரம்பமாகி நடந்து கொண்டிருந்தன. சொத்துகுவிப்பு வழக்கை விரைந்து நடத்தி முடிப்பதில் பெங்களூர் நீதிமன்றம் மிகவும் ஆர்வம் காட்டிவருவது வெளிப்படை.

எனவே தான் இந்த வேகத்தை ஆமைவேகமாக்க தமிழக முதலமைச்சர் ஜெய லலிதா கங்கணம் கட்டி நிற் கின்றார் என்றும், அதற்காகவே தான் சொத்துக்குவிப்பு வழக்கையும், லண்டன் விடுதி வாங்கிய வழக்கையும் ஒன்றாக சேர்த்து விசாரணை நடத்த வேண்டுமென்றும் கூறியதாக தி.மு.க தரப்பு கூறுகிறது.

ஆனால் தமிழக முதலமைச்சரின் எத்தனங்கள் யாவுமே தவிடுபொடியாகி இருப்பதாகவும் தி.மு.க பொதுச்செயலர் பெரு மிதப்பட்டுக் கொண்டிருக் கின்றமையும் இல்லாமலில்லை.

ஏனெனில் தி.மு.க பொதுச்செயலர் அன்பழகன் பெங்களூர் நீதிமன்றத்தின் தீர்ப்பினை எதிர்த்து மனுத்தாக்கல் செய்தமையினை அடுத்து, உயர்நீதிமன்றம் பெங் களூரின் தீர்ப்பிற்கு இடைக் காலத் தடைவிதித்திருக்கின்றது.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, அவரது தோழி சசிகலா, வளர்ப்பு மகன் சுதாகர், டி.டி.தினகரன், இளவரசி போன் றோர் மீதே வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததான வழக்கானது தமிழக நீதிமன்றங்களைத் தாண்டி பெங்களூரில் கடந்தாண்டில் ஆரம்பமானது.

ஆனால் , இதுவரை 21 முறை வழக்கு விசாரணைகள் நடத்தப்பட்டிருக்கின்றது. 21 தடவையும் குற்றஞ்சாட்டப்பட்ட ஐந்துபேரும் ஒன் றாக நீதிமன்றத்திற்கு வந்த தில்லை என்பதே உண்மை.

ஒவ்வொரு முறையும் விசாரணைகள் ஆரம்பமாகும் போது குற்றஞ்சாட்டப்பட்டோர் அடுத்தமுறை நேரில் வரவேண்டுமென்று பெங்களூர் தனி நீதிமன்ற நீதிபதி பச்சாபுரே கட்டளையிடுவதும் வழமை. ஆனால் இவர்கள் ஐந்துபேரும் நீதிமன்றம் செல் வதைத் தவிர்த்து வந்தனர். இதனால் வழக்கின் தீர்ப்பு எட்டப்படாமலேயே தள்ளிச் சென்றது.

இதனால், வெறுப்படைந்த நீதிமன்றம் முதலில் டி.டி. தினகரனைப் பிடிப்பதற்கு பிடியாணை பிறப்பித்தது. இதனால் இனியும் தாமதிப்பது பேராபத்தாக முடியும் என்றோ அல்லது தமிழக முதலமைச் சரின் ஆலோசனையோ, இவர்கள் தரப்பு வழக் கறிஞர் ஜோதியின் கட்டளையோ... தெரியவில்லை, தினகரன் பெங் களூர் நீதிமன்றில் ஓடோடி சரண டைந்து விட்டார்.


ஜெயலலிதா

தினகரனில் நிலையினை யடுத்து தனக்கும் இந்த நிலை நேரக் கூடும் எனும் அச்ச மாகக் கூட இருக்க முடியும், சுதாகர் தாமாகவே நீதிமன்ற விசார ணைகளில் கலந்து கொள்வதற் காக பெங்களூர் காற்றாகப் பறக்கத் தொடங்கி னார்.

ஆனால், குற்றம் சாட்டப் பட்டவர்களின் பிரதானமானவர்களாகக் கருதப்படும் ஜெய லலிதா, சசிகலா, இளவரசி போன்றோர் ஒரு முறை கூட நீதிமன்றத்தின் வாசல் மிதித்ததில்லை.

இதனால், கடந்த யூலை விசார ணையின்போது கோபமடைந்த நீதிபதி பச்சாபுரே ஓகஸ்ட் இரண்டாம் திகதி குற்றஞ்சாட்டப்பட்டோர் அனைவரும் வராத பட்சத்தில் பிடியாணை பிறப்பிக்கப்படும் என்று தீர்ப்பு வழங்கி பெங்களூரையும், தமிழகத்தையும் அதிர்ச்சிக்கு ள்ளாக்கினார்.

அது மட்டுமன்றி அரசு வழக்கறிஞர், ஆச்சாரியா சொத்து குவிப்பு வழக்கை உச்சநீதிமன்றம் பெங்களூ ருக்கு மாற்றியது வழக்கை விரைந்து நடத்தி முடிப்பதற்கே. ஆனால், இங்கும் இழுத்தடிப்பேதான் தொடர்கதையாக தொடர்கின்றது. எனவே, குற்றஞ்சாட்டப்பட்டோர் ஐந்து பேரையும் விசாரணைக்குக்கொண்டு வருவதற்கு நீதிபதி கூடிய கவனமெடுக்க வேண்டுமென்று, மேலும் நீதிபதிக்கு ஊதிக் கொடுத்தார்.

இதனையடுத்தே கடந்த இரண்டாம் திகதி நிலவரம் பெரிதும் பரபரப்பாக எல்லோ ராலுமே கண்காணிக்கப்பட்டது. அன்றைய நாள் எல்லோராலும் கவனிக்கப்பட்டது என்பது உண்மைதான்.

இதனால்தான், இனியும் தாமதம் செய்வது தமக்குப் பாதகமாகிவிடும் என்பது போன்றே சசிகலா, இளவரசி இருவரும் உட்பட,டி.டி. தின கரன், சுதாகர் போன் றோரும் நீதிமன்றப் படியேறினர், பெங்களூர் நீதிமன்ற வாசலை மிதிப்பது சசிகலா, இளவரசி இருவரும் இதுவே முதல் முறை என்பது குறிப் பிடத்தக்க தொன்று.

இதனால், வழக்கு விசா ரணை சூடுபிடிக்கும் என்று எதிர்பார்த்தால் மீண்டும் சொதப்பல்களே அதிகம் என்பதே மற்றொரு வெளிப் படை யாகத் தெரியவருகின்ற உண்மையாகும்.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் வழக்கறிஞர் ஜோதி, வழக்கு விசாரணை யினை திசை திருப்பிவிட்டார் என்றுதான் கூறவேண்டும். இல்லையேல் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணை நடந்து கொண்டிருக்கும் போது, எவருமே தம்மை வழக்கி லிருந்து விடுவிக் குமாறு மனுத் தாக்கல் செய்வதில்லை என்பதே சட்டமரபு.

ஆனால், குற்றஞ்சுமத்தப்பட்ட ஐந்து பேரும் கடந்த இரண்டாம் திகதி தம்மை வழக்கிலிருந்து விடுவிக்குமாறும் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

அத்துடன் தமிழக முதல மைச்சரின் வழக்கறிஞர் ஜோதி, புதிதாக ஒரு சிக்க லையும் தோற்றுவித்துள்ளார். அதாவது, மக்கள் பிரதிநிதிகள் மீது வழக்குத் தொடரும் அதிகாரம் சட்டசபை சபா நாயகருக்கு மட்டுமேயுண்டு என்று 1998இல் உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்திருக் கையில், 2001இல் லண்டனில் விடுதி வாங்கியதாக ஜெய லலிதா மீது வழக்குத் தொடர ஆளுநரே அனுமதி அளித் துள்ளார் சபாநாயகர் அல்ல. எனவே, ஆளுநரின் அனும திப்படி ஜெயலலிதா மீது வழக்குத் தொடரப்பட்டமை யானது செல்லுபடியாகாது என்பது போன்றே தமது கருத்தை முன்வைத் திருக்கின்றார்.

எனவே, இனிவரும் காலங்களில் வழக்கின் போக்கு மாறப் போகின்றது என்றே நம்பலாம். அதாவது, தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மீது 2001 இல் லண்டனில் விடுதி வாங்கியதாக தொடரப்பட்ட வழக்கு செல்லுபடியாகாது.. என்றும் ஆளுநருக்கு எப்படி அனுமதிக்க முடியும்... ஆளு நருக்கு யார் அதிகாரம் கொடுத்தார்கள்... என்றே வழக்குத் திசை திரும்பக்கூடும்.

எனவேதான் தமிழக முதலமைச்சர் தான் நினைத் ததை சாதித்துவிட்டார் என்று தான் இப்போது கூறத்தோன்று கின்றது. ஏனெனில், பெங்களூர் நீதிமன்றத்தின் தீர்ப் பிற்கு உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டபோதும் அவர் மறு புறமாக ஏதோ ஒரு வகையில் வழக்கு விசார ணைகளை தாமதமாக்கி விட்டார் என்று தான் கருத்துக் கூற வேண்டியுள்ளது.



நீதிபதி பச்சாபுரே

எனவே, பெங்களூரில் தொடங்கியுள்ள விசாரணைகள் இதுவரை 22 முறைகள் நடந்து முடிந்திருக் கின்றன. ஆனால், ஒரு முறைகூட தமிழக முதல மைச்சர் பெங்களூர் நீதிமன்றத்திற்கு சென்ற தில்லை என்பதே அவரது வழக்கு இழுத்தடிப்பை நமக்கு படம் பிடித்து காட்டத் தவறவில்லை.

அத்துடன், சொத்துக் குவிப்பு வழக்கு நிலுவையில் இருக்கும்போதே அவர் தமிழ கத் தேர்தலை நடத்தி முடித்தாலும் ஆச்சரி யப்படுவதற்கில்லை.


சுதாகர்


சசிகலா இளவரசி



ஏனெனில், அவரது இப்போதைய நகர்வுகள் அனைத்துமே தமிழக சட்ட சபைத்தேர்தலை நோக்கித்தான் என்பது வெளிப்படை. எனவே, சொத்துக்குவிப்பு வழக்கின் தீர்ப்பு விரைவில் வெளிவந்துவிட ஒத்துழைப்பார் என்பதற்கில்லை. அதனால், சொத்துக்குவிப்பு எப்படியும் தமிழக சட்ட சபைத்தேர்தலின் பின்னர்தான் என்று நம்பத் தோன்றுகின்றது.

என்றாலும், சட்டம் எப்போதும் தூங்கி விடாது... சட்டம் தன் கடமையினைச் செய் யும்... என்று கூறும் தமிழக முதலமைச்சரின் பொன் மொழிகள் அவருக்கு எதிராக எப்போது திரும்புமோ... என்பதே இன்றைய வினாவின்றி வேறில்லை எனலாம்.

**அ.கலைவாணி**

---

## இரத்மலானையில் புகையிரதங்கள் மோதியதில் 29 பேர் காயம்

கொழும்பிலிருந்து அளுத்கம நோக்கிச் சென்றுகொண்டிருந்த புகையிரதமும் இரத்மலானையில் பழுதடைந்த புகையிரதப் பெட்டிகளை ஏற்றிச் சென்ற புகையிரதமும் மோதியதில் 29 பேர் காயமடைந்துள் ளனர்.

நேற்றுப் பகல் 12.05 மணியளவில் இரத்மலானை புகையிரத நிலையத்திற்கு அருகே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பழுதடைந்த புகையிரதப்பெட்டிகள் திருத்த வேலைகளுக்காக இரத் மலானையிலுள்ள தொழிற்சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட வேளையி லேயே இச்சம்பவம் இடம்பெற்றது.

பழுதடைந்த பெட்டிகளை இழுத் துச் சென்ற புகையிரதத்திலிருந்து பெட்டிகள் கழன்று பின்புறமாக வந்து அளுத்கம நோக்கிச் சென்ற புகை யிரதத்தின் இயந்திர பாகத்துடன் மோதியுள்ளது. இதன்போது சாரதிகளில் ஒருவர் புகையிரதத்திலிருந்து வெளியே பாய்ந்துள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த 29 பேரில் 27 பேர் கொழும்பு தெற்குப் போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

புகையிரதத்தின் சாரதியும் மற்றுமொருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

## மட்டுவிலில் கண்ணிவெடியில் குடும்பஸ்தர் சிக்கிப்பலி

யாழ். தென்மராட்சி மட்டுவில் பிரதேசத்திலுள்ள பன்றிதலைச்சி யம்மன் ஆலயத்திற்கு அருகே யுள்ள காணியொன்றைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த ஒருவர் அமுக்கவெடியில் சிக்கி உயிரிழந்தார்.

இறந்தவர் மூன்றுபிள்ளைகளின் தந்தையான குழந்தையன் திருநாவுக்கரசு (வயது -45) என்பவராவார்.

இச்சம்பவத்தில் காணி உரி மையாளரே உயிரிழந்துள்ளார்.

இறந்தவரின் சடலம் நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரி மருத்துவமனையில் ஒப்படைக் கப்பட்டதாக சறிலங்காப்பொலிசார் தெரிவித்துள்ளனர்.



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்







# முன்னேறுங்கள் வெற்றிபெறுங்கள்

ஒரு அணியின் வெற்றி என்பது வீரர்களின் சமார்த்தியமான மதிநுட்பம் வாய்ந்த முடிவிலேயே தங்கியுள்ளது.

இது சர்வதேச போட்டிக்கும் உள்ளூர் போட்டிக்கும் பொருந்தும். அதாவது காலமறிந்து காய் நகர்த்துவது முக்கியமானது. இதனை நல்ல முறை யில் பயன்படுத்தினால் அணியின் வெற்றி சுலபமாக அமைந்துவிடும்.

இந்த வகையில் போட்டியிடும் இரு அணிகளும் மேற்படி கருத்துக்கமைய அணியை வழிநடத்தின் போட்டி சுவாரசியமாக அமைவதுடன் ரசிர்களுக்கு அரியதொரு விருந்தாகவும் அமைந்து விடுகின்றது.

இதனை வெளிப்படுத்தும் வகையில் சர்வதேச போட்டியில் இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் ஆஷஸ் கிண்ணத்துக்கான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணியை இரண்டு ஓட்டங்களால் தோற்கடித்த இங்கிலாந்து அணியின் வெற்றி மற்றும் மேற்கிந்தியத்தீவு அணியின் வெற்றி வாய்ப்பை தடுத்து நிறுத்திய இந்திய அணியின் முயற்சிகளை அண்மைய தகவலாகக் கொள்ளலாம்.

இதற்கு எதிர்மாறான சம்பவமாக இந்திய-சிறிலங்கா அணிகளுக்கிடையில் நடைபெற்ற கடைசி லீக் ஆட்டத்தில் 226 என்ற வெற்றியிலக்கை நோக்கி ஆடிய சிறிலங்கா வெறும் 95 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுக்களை இழந்து நெருக்கடியில் இருந்தது. ஆனால் ஏழாவது விக்கெட் இணை அபாரமாக ஆடிவெற்றி இலக்கை அடைந்தது. ஆனால் இந்திய அணி வீரர்களோ எதனையும் செய்ய முடியாது செயலற்றிருந்தனர். இது அவர்களது வியூக அமைப்புக்கு ஏற்பட்டதோல்வி என்று கூறுவதில் எந்தத்தவறும் இருக்க முடியாது.

இந்த வகையில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழாவை முன்னிட்டு கழகங்கள்,பாடசாலை ரீதியாக நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டிகள் பரபரப்பையும் சுவாரசியத்தையும் ஏற்படுத்தியது.

கடந்த சனிக்கிழமை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டிகளில் முதலாவது இறுதிப் போட்டியில் மல்லாவி மத்திய கல்லூரி அணியும், வற்றாப்பளை ம.வி அணியும் மோதின. இது பரபரப்புக்கு பஞ்சமில்லாத போதும் வெற்றிக்கு வெறும் 39 ஓட்டங்களைப் பெற வேண்டிய மல்லாவி மத்திய கல்லூரி அணி எட்டு விக்கெட்டை இழந்தே வெற்றியிலக்கை அடைந்தது. இது ஒன்றைத் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. எதிர் அணியின் திறமையான வியூகம் பாராட்டும்படியாக இருந்தவேளை துடுப்பாட்ட வீரர்களின் பொறுமையின் மையை வெளிப்படுத்தியது.

இதில் மத்திய கல்லூரி வீரர் ஐங்கரன் நான்கு ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக் கெட்டுக்களைக்கைப் பற்றியமை சிறப்பானதாக அமைந்திருந்தது. அவரது நேர்த்தியான பந்து வீச்சு துடுப்பாட்ட வீர்களைத் திணற வைத்தது. மென்பந்தில் (TENES) அவ்வளவு திறமையாக பந்து வீசுவதென்பது சாதாரணவிடயமாக இருக்க முடியாது. அவருக்கு நிறையவே எதிர்காலமுண்டு என்பதை உணரக்கூடியதாக இருந்தது.

துடுப்பாட்டத்தில் எட்டு விக்கெட்டை இழந்த போதும் வெற்றிபெற மூன்று ஓட்டங்கள் தேவையான நிலையில் ஆறு ஓட்டங்களைப் பெற்று அணியை வெற்றிபெறச் செய்த பிரசன்னாவின் மனோதிடம் பாராட்டப்படவேண்டியதொன்றே. வளரவாழ்த்துக்கள்.

இன்னொரு போட்டி வித்தியா-தோழர்கள் அணிகளுக்கிடையில் நடைபெற்றது. இதில் வித்தியா அணி சார்பாக ஆரம்ப வீரராக ஆடிய சரவணனின் ஆட்டம் ஏதோ சர்வதேச போட்டி ஒன்றைப் பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தியது.

அவர் ஒவ்வொரு பந்தையும் கவனித்த விதம் மட்டை வீச்சு என்பன அழகான முறையில் அமைந்திருந்தது. தத்தமது அணி வெற்றி பெற வேண்டும் என்றால் ஒவ்வொரு வீரரின் பொறுப்பானன பணி முக்கியமானது. அதனை உணர்ந்து செயற்படுபவரே சாதிக்கவும் முடியும். நிலைக்கவும் முடியும்.

இந்த வகையில் கிரிக்கெட்டைப் பொறுத்து ஒவ்வொரு ஓட்டங்களும் பெறுமதி வாய்ந்தவை அதனை வீரர்கள் அலட்சியம் இன்றி பெறவேண்டியது கடமை. அந்த வகையில் சரவணன் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தினார். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஆடுகளத்தில்( PITCH ) பந்தைத் தட்டிவிட்டு ஓட்டங்களைப்பெற்றதை அவரது நிதானமான துடுப்பாட்டத்தை நன்குவெளிப்படுத்தியது. அவர் இறுதியில் 30 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். அது அவர்களது அணியின் வெற்றிக்கு அடித்தளமாக அமைந்தது.

எதிரணியான தோழர்கள் அணியோ, 15 ஓவரில் இழந்ததோ, ஏழு விக்கெட் பெற்ற ஓட்டங்களோ 64, அவர்களிலும் திறமையான துடுப்பாட்ட வீரர்கள் இருந்தார்கள். ஓட்ட குவிப்பில் கோட்டை விட்டனர். நிச்சயம் குறுகிய ஓவர் கொண்ட போட்டிகளில் துடுப்பாட் வீரர் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவிப்பதே பொருத்தமானது. அதனைத் தோழர்கள் அணி தவறவிட்டது என்றுதான் கூறவேண்டும்.

இதற்கு வித்தியா அணியின் நேர்த்தியான பந்துவீச்சும் ஒரு காரணமாக அமைந்தது. ஆனாலும் தோழர்கள் அணியின் சுகந்தன் 36 ஓட்டங்களைப் பெறுகிறார் என்றால், ஏனைய வீரர்க ளால் ஏன் பெறமுடியாது போனது என்பதும் கேள் வியே. எனவே போட்டி என்று வரும் போது அது உள்ளூராக இருக்கலாம், சர்வதேச போட்டியாக இருக்கலாம், சவாலாக எடுங்கள். முன்னேறுங்கள் வெற்றிபெறுங்கள்.

**இ.சியான்**

---

# எதிர்காலம் பசுமையானது

**இன்று** நடைபெறும் இந்திய -சிறிலங்கா மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையேயான முக்கோண ஒரு நாள் கிரிக்கெட் போட்டி சிறிலங்காவிற்கா அல்லது இந்தியாவிற்கா கிண்ணம் என்பதைத் தீர்மானித்துவிடும்.

சிறிலங்கா -இந்திய அணிகளில் நன்கு பயிற்சிபெற்ற அனுபவம் பெற்ற ஏன் பல சாதனைகளைப் படைத்த துடுப்பாட்ட வீரர்களும், பந்து வீச்சாளர்களும் பங்கேற்கின்றனர். அவ்வப்போது ஒரு சில புதுமுகங்களை அணிகள் அறிமுகம் செய்தபோதும் அவர்களும் தமது பணியை ஓரளவு நிறைவேற்றி சென்றுள்ளனர். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட அனுபவமிக்க துடுப்பாட்ட வீரர்களோ பந்து வீச்சாளர்களோ இப்போட்டியில் பெரிதாக சாதிக்கவில்லை என்றே கூறலாம். எனினும் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதி லீக் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிராக ஆடிய இந்திய துடுப்பாட்ட வீரர்களான யுவராஜ்சிங், கைப் இருவரும் நிதானத்தைக் கடைப்பிடித்துள்ளனர்.

இங்கு விசேடமாக குறிப்பிடவேண்டிய விடயம் மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் அணியையாகும். பல முன்னணி வீரர்களான சாதனைக்குப்பெயர்பெற்ற பிரைன் லாறா மற்றும் ராம்நரேஷ் சர்வான், கிறிஸ்செயல் மற்றும் 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.சி.சி மினி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றக் காரணமாக இருந்த பிராவோ பிரட்ஷோ ஆகியோர் அணியில் இடம்பெறாத நிலையில் அனுபவம்பெறாத இளம் வயது வீரர்களின் உதவியோடு சிறிலங்கா அணியுடன் டெஸ்ட் போட்டியில் பங்கேற்று அதன் பின் பலமிக்க இரு அணிகளுடன் முக்கோணப் போட்டிகளில் பற்கேற்க எதுவித தயக்கமும் காட்டாமல் வருகை தந்த அவ்வணி ஏனைய இரு அணிகளுக்கும் பாரிய சவாலை விடுத்துள்ளது என்றால் மிகையாகாது.

காரணம் இளம் வீரர்கள் அணியுடன் அதாவது ஒரு பலமற்ற அணியுடன் போட்டியிடுவதை தான் பெரிதாக விரும்பவில்லை என சிறிலங்கா அணித்தலைவர் அத்தப்பத்து தெரிவித்திருந்தமையாகும். ஆயினும் கடந்த ஆறாம் திகதி கொழும்பில் நடைபெற்ற லீக் போட்டியில் அந்த விமர்சனத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 33 ஓட்டங்களால் சிறிலங்காவை வெற்றி கண்டது. குறிப்பாக இந்திய பந்து வீச்சாளர்களை அச்சுறுத்தி காயத்தினால் அவதிப்பட்டாலும் சிறப் பாக



துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா அணியின் பிரபல துடுப்பாட்டவீரர் ஜெயசூரியா மேற்கிந்தியத்தீவுகளின் அனுபவமற்ற வீரர்களின் பந்து வீச்சைச் சமாளிக்க முடியாது ஆட்டமிழந்தும் முரளிதரன், சந்தன தில்ஷான் போன்ற பந்து வீச்சாளர்களினால் அவ்வணியின் துடுப்பாட்டத் தைக் கட்டுப்படுத்த முடியாது போனதும் அதனால் தோல்வியடைந்ததும் அத்தப்பத்துவிற்குக் கொடுக்கப்பட்ட அடியாக அமைந்திருந்தது.

அத்துடன் நேற்று முன்தினம் இந்திய அணி மயிரிழையில் வெற்றியையும், கௌரவத்தையும் தக்கவைத்துக்கொள்ள நேர்ந்ததையும் ரசிகர்கள் மறக்கவோ, மறுக்கவோ முடியாது. அவ்வணியின் அனுபவ வீரர் சந்தர்போல் இல்லாத நிலையில் இளம் வீரர்கள் மோட்டன், ஸ்மித், ராம்டீன் பேங்ஸ் ஆகியோரின் ஆட்டம் நோக்கர்களாலும் ரசிகர்களாலும் வரவேற்கப்பட வேண்டியதே.


எனவே ஒரு காலத்தில் கிரிக்கெட் என்றால் மேற்கிந்தியத்தீவுகள், மேற்கிந்தியத்தீவுகள் என்றால் கிரிக்கெட் என்றிருந்து இடையில் பாரிய வீழ்ச்சி கண்ட அவ்வணி வளர்ந்துவரும் இவ்வீரர்களால் நிச்சயம் மீண்டும் சர்வதேசத்தில் பிரகாசிக்கும் என்பதில் ஐயமில்லை.

**வடிவேல்**

---

அடித்தால் அதிரடியாக ஆடி அசத்துவது. வீழ்ந்தால் சீட்டுக்கட்டுசரிவது போல மளமளவென சரிவது. இதுதான் இந்தியக் கிரிக்கெட்டின் நிலை. சொந்த மண்ணில் இந்திய கிரிக்கெட்டின் பரம எதிரியான பாகிஸ்தானிடம் தொடர்ந்து நான்கு முறை படுதோல்வி கண்டு விழுப்புண்ணுடன் கர்ஜித்து கிளம்பிய இந்திய இளம் சிங்கங்கள், இலங்கை சிங்கங்களுடன் மோதி மீண்டும் விழுப்புண் பெற்றமை இந்திய ரசிகர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தி வருகிறது.

இந்தியா, இலங்கை மற்றும் மேற்கிந்தியத் தீவு ஆகிய அணிகளுக்கிடையேயான முத்தரப்பு ஒரு நாள் போட்டி



# ஏன் ஏமாற்றுகிறீர்கள்

இலங்கையில் நடந்து வருகிறது. இதுவரை இலங்கையுடன் மோதிய இரண்டு ஒரு நாள் போட்டிகளிலும் மோசமான தோல்வி பெற்றது. பந்துகளை கணித்துவிளையாடாதது, விக்கெட்டுக்களுக்கு இடையே வேகமாக ஓட்டங்களைச்சேர்ப்பது, துல்லியமான களத்தடுப்பு இவைகள் இல்லாததே தோல்விக்கு முக்கிய காரணம். கடந்த சில மாதங்களுக்கு முன் இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த பாகிஸ்தான் அணியுடன் இந்திய அணி ஆறு ஒரு நாள் போட்டியில் விளையாடியது. இதில் முதல் இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்றது. அதன் பின்ஆடிய நான்கு போட்டியிலும் தோல்வி முகம் தான்.

இதற்கும் கிரிக்கெட்டின் சகல துறைகளிலும் வீரர்களின் மோசமான செயற்பாடுகளே முக்கிய காரணமாக உள்ளது. தற்போதும், அதே தவறு இலங்கை முத்தரப்பு போட்டியில் அரங்கேறுகிறது. தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு மேல் ஓய்வில் இருந்த இந்திய அணி வீரர்கள் தங்களின் பயிற்சிகளை செம்மைப்படுத்திக் கொண்டிருந்தால் இந்த முத்தரப்புத் தொடரில் பிரகாசித்திருக்கலாம். ஆனால் விளம்பரங்களில் நடிப்பதிலும், தொழிலை கவனிப்பதிலும் இருந்த வேகம் பயிற்சி செய்வதில் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்பது ரசிகர்களின் வருத்தம்.

# கடந்த 6 மாத காலத்தில் 686 வாகனங்கள் கடத்தல்

கடந்த ஆறு மாதகாலப்பகுதியில் மாத்திரம் சிறிலங்காவில் 686 வாகனங்கள் கடத்தப்பட்டுள்ளதாக பொலிசார் தகவல்கள் தெரிவித்துள்ளனர். 2004 ஆம் ஆண்டில் மாத்திரம் 1560 வாகனங்கள் கடத்திச் செல்லப்பட்டன.

அதேநேரம் 2003 ஆம் ஆண்டு 1112 வாகனங்கள் கடத்திச் செல்லப்பட்டிருந்தன. இந்த நிலையில் தொடர்ந்தும் இவ்வாறான வாகனக் கடத்தல்கள் இடம்பெற்று வருவதால் அதனைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர். (32)

# மலையக மக்களின் பிரச்சினைகளுக்காக நடத்தப்படும் போராட்டங்களுக்கு ஆதரவு

## -இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி தெரிவிப்பு

மலையக தமிழ் மக்கள் தற்போது எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படும் போராட்டங்களுக்கு தமது கட்சி முழுமையான ஆதரவளிப்பதாக இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் செயலர் எஸ்.சதாசிவம் தெரிவித்துள்ளார். கடந்த சனிக்கிழமை நுவரேலியாவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர், அரசியல் நோக்கங்களை கொண்டு நடத்தப்படும் போராட்டங்களின் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியாது எனக் குறிப்பிட்டுள்ளார்.மலையகத்தில் இளைஞர் வேலைவாய்ப்பு, தென்மாகாணத்தில் தோட்டத்தொழிலாளர் மீதான வன்முறைகள் மற்றும் ஏனைய அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து போராட்டங்கள் நடத்தப்படுவது அவசியம். இந்த நிலையில் அவற்றிற்கு தமது கட்சி முழுமையான ஆதரவளிக்குமென எஸ். சதாசிவம் குறிப்பிட்டார்.(32)

### வாக்களிப்பு அட்டைகள் அச்சிடும் பணி நிறைவு

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலுக்கான தபால் வாக்களிப்பு அட்டைகள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் அச்சிட்டு முடிவடைந்துள்ளதென தேர்தல் திணைக்களப் பிரதம செயலாளர் காரியாலயத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் தமிழில் 35,000 வாக்குச்சீட்டுக்களும் ஆங்கிலத்தில் 50,000 வாக்குச் சீட்டுக்களும், சிங்களத்தில் இரண்டு இலட்சம் வாக்காளர் சீட்டுக்களும் அச்சிடப்பட்டுள்ளதென தேர்தல் திணைககள ஆணையாளர் கரியாலயம் தெரிவித்துள்ளது.


# பணிநிலை வேண்டுகை

## வட,கிழக்கு வன்றொழிநுட்ப அபிவிருத்தி நிறுவனம்

**உங்கள் எதிர்காலத்தையும் நாட்டின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கக் கூடிய அரிய வேலை வாய்ப்புக்கள் உங்கள் தகைமைக்கு ஏற்றவாறான பல்வேறு வேலைகள் உங்களுக்காகவே காத்திருக்கின்றன.**

- அனைத்து வேலைகளுக்கும் மூன்று மாதம் பயிற்சி வழங்கப்படும்.
- பயிற்சி நெறிக்காலத்திலேயே 6000.00 அடிப்படைச் சம்பளம் வழங்கப்படும்.
- ஆண்,பெண், இருபாலரும்இவ்வேலைக்கு விண்ணப்பிக்கலாம்.
- ஆண்டு எட்டுவரை கற்றிருத்தல் போதுமானது. கல்வித்தகைமைக்கு ஏற்ப வேறுபட்ட வேலைகள் வழங்கப்படும்.
- அகவை 18–32 இற்குள் இருக்க வேண்டும்.
- நேர்முக நாள்:– 17.08.2005 காலை 9.00 மணி தொடக்கம் பகல் 12.00 மணிவரை
  18.08.2005 காலை 9.00 மணி தொடக்கம் பகல் 12.00 மணிவரை.
- நேர்முக இடம்:– வி.விக்கினேஸ்வரன்,
  மு.கணேச வித்தியாலயம்,
  கைவேலி,
  புதுக்குடியிருப்பு.
- தங்குமிட வசதி இலவசமாக வழங்கப்படும்.

நேர்முகத் தேர்வில் அன்று கொண்டு வரவேண்டியவை:–

01. தேசிய அடையாள அட்டை.
02. பிறப்பு அத்தாட்சிப் படிவம்.
03. வேறு தகைமைச்சான்றிதழ்கள்.

(சி.12492)

**பதினேழாம் நாளுக்காக இன்றே தயாராகுங்கள்**



# பணிநிலை வேண்டுகை

கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்களது தன்வரலாறடங்கிய (சுயவிபரம்) வேண்டுகைகளை 2005.08.13 ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

**பணிநிலை:**

01.ஆய அலுவலர் (ஆண்கள்)
02.ஆய உதவியாளர் (ஆண்கள்)

**கல்வித்தகைமை:**

பணிநிலை 01.க.பொ.த (உ/த) பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
பணிநிலை 02.க.பொ.த (சா/த) பரீட்சையில் குறைந்தது 04 பாடங்களில் தேர்ச்சி அடைந்திருத்தல் வேணடும்.

**வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி:**

மேலாளர்,
ஆளணிப்பிரிவு,
நடுவப்பணியகம்,
ஆயம.

**நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள்:**

2005.08.16
காலை 10.00 மணிக்கு

**நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:**

நடுவப்பணியகம்,
ஆயம்,
கிளிநொச்சி.

**குறிப்பு:-நேர்முகத்தேர்வுக்குக் கடிதம் அனுப்பப்படமாட்டாது. நேர்முகத்தேர்வுக்குச் சமுகமளிப்பவர்கள் தகைமைச் சான்றிதழ்களுடன் வரவும்.**

(சி.12491) **மேலாளர், ஆளணிப்பிரிவு, ஆயம்**



# REQUEST FOR PROPOSAL

COMITE INTERNATIONAL GENEVE

**Open Well rehabilitation & Construction of Medical shelters**

**Closing Date: 15th August 2005**

The Sub-Delegation of the International Committee of the Red Cross (ICRC) in Kilinochchi is searching for construction companies, willing to contract for Open Well rehabilitation and the building of medical shelters in Mullaitivu and Vanadamarachchi East. The projects should start by 21st of August 2005.

**1) Project Quantities and Phases**

**1. Project #1:**

4 X Semi Permanent Medical Shelters Dimensions:30 X **20 Feet**
Quality of walls: 7feet high concrete block work.
Pillars: 9 X Pillars, 7 feet high by 8 inch wide.
Windows: 02 X Window, 3X 3 feet.
Doors:1 X wood Door; single-side opening/ 3 X 6 feet
Quality of Floor: concrete floor / 30 X 20 Feet/plastered
Quality of roofing: Cadjan roofing

**2. Project #2**

21 X Open well- Apron + Drainage
23 X Open well Pillars (Pair)
Dimensions: 5 feet open well, 4 feet diameter Apron,
1 feet -6 inch Long X 6 Inch Width Drainage Channel,
8 feet height X 1 feet Width Pillar

**2. Structure & Detail of Proposal.**

- The proposal should feature subtotal-amounts for every subproject
- All materials should be listed and quantified both in volume and unit price
- Labour costs should be listed and quantified both in volume and unit price
- Project start & end dates should be indicated for every project
- All prices are to denominated in local currency (LKR)
- Terms of payment has to be indicated in the proposal

**Specific details of the project, including diagrammatic representation are available on request at the offices of the ICRC in Kilinochi and Puthukkudiyiruppu**

**The projects will be carried out under the strict supervision of the ICRC.**

Interested Companies and individuals are invited to submit their bids in a sealed envelope until **15th of August 2005** to the following address:

**International Committee of the Red Cross**
**Subdelegation Kilinochchi,**
**Logistics Department,**
**Iranamidu Junctionm,**
**Kilinochchi.**

(சி.12489)

# பிரதான எண்ணெய்க்குழாய் உல்பா தீவிரவாதிகளால் தகர்ப்பு!

## அசாம் மாநிலத்தில் நெருக்கடி

(அசாம்)

**அசாம் மாநிலத்தில் பிரதான எண்ணெய் குழாயை உல்பா தீவிரவாதிகள் குண்டு வைத்து தகர்த்துள்ளனர். இதனால், மாநிலத்தில் நெருக்கடி நிலை வலுவடைந்துள்ளது.**

அசாம் மாநிலம் சிப்சாகர் மாவட்டத்தில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்குள் கடந்த சனிக்கிழமை இரவு ஏழு தீவிரவாதிகள் திடீரென உள்ளே நுழைந்தனர். அங்கிருந்த நான்கு காவலர்களை துப்பாக்கி முனையில் கட்டிப்போட்டனர்.

பின்னர் சுத்திகரிப்பு நிலையத்தின் பிரதான எண்ணெய்க் குழாயைக் குண்டு வைத்துத் தகர்த்தனர். இதனால், அது தீப்பிடித்து எரிகிறது. எண்ணெய் குழாய் அருகில் இருந்த பத்து வீடுகளும் கடுமையாக சேதம் அடைந்துள்ளன. எனினும் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை.

தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்க கடுமையாகப் போராடி வருகின்றனர். சுற்று வட்டார சுத்திகரிப்பு நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. சம்பவம் குறித்து பொலிசார் கூறுகையில், சுதந்தரதின கொண்டாட்டத்தைச் சீர்குலைக்கும் வகையில் எண்ணெய்க் குழாயை உல்பா தீவிரவாதிகள் குண்டு வைத்துத் தகர்த்துள்ளனர். அவர்கள் பயன்படுத்திய குண்டு சீனாவில் தயாரிக்கப்பட்டது. தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் அனைவரும் தப்பியோடிவிட்டனர் என்று தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தால் அசாம் மாநிலத்தில் பெற்றோல், டீசல் விநியோகம் தடைப்பட்டுள்ளது. நிலைமை சீரடைய ஐந்து நாட்கள் வரை ஆகும் என்று எண்ணெய் விநியோக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தவிர நல்பாரி மாவட்டம் டாம்டாமா என்ற இடத்திலுள்ள இராணுவ முகாம் அருகேயும் உல்பா தீவிரவாதிகள் நேற்று முன்தினம் கையெறி குண்டுகளை வீசினர். ஆனால், குறி தவறியதால் இராணுவ வீரர்கள் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

## உச்சநீதிமன்றம் வரம்பு மீறக்கூடாது

### எச்சரிக்கிறார் சட்டர்ஜி


(டில்லி)

மத்திய அமைச்சர்களை நியமிப்பது பிரதமரின் பிரத்தியேக உரிமை. அதில் உச்ச நீதிமன்றம் வரம்பு மீறி தலையிடக்கூடாது என்று மக்களவை சபாநாயகர் மீண்டும் கூறியுள்ளார்.

மத்திய அமைச்சரவையில் அமைச்சர்களை நீக்கக் கோரி உயர் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அதில் மத்திய அரசுக்கு விபரம் அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு மத்திய அரசு பதிலளித்து பிரமாண பத்திரம் தாக்கல் செய்திருக்கிறது.

ஆனால், "மத்திய அமைச்சர்களை நியமிப்பது பிரதமரின் பிரத்தியேக உரிமை. இது போன்ற வழக்குகளை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளக்கூடாது" என்று மத்திய அரசு கூறியிருந்தது. இதே கருத்தை மக்களவை சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி ஏற்கனவே கூறியிருந்தார். இந்த நிலையில் பஞ்சாயத்து ராஜ்ஜியத்தைப் பலப்படுத்துவது தொடர்பான சட்டமன்ற உறுப்பினர்களின் வட்ட மேசை மாநாடு கேரள மாநிலம் திருச்சூரில் நடந்தது. அதில் கலந்து கொண்ட சோம்நாத் சட்டர்ஜி கூறியதாவது;

சட்டத்துக்கு விளக்கம் அளிப்பதும், நீதி நிர்வாகத்தை நிர்வகிப்பதும் நீதித்துறையின் வேலை. நீதிமன்றங்கள் தங்கள் அதிகார எல்லையைத் தாண்டி விடாதபடி கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டார்.



தமிழகம் தருமபுரியருகே கண்டெடுக்கப்பட்டு பின் செயலிழக்கம் செய்யப்பட்ட வெடிகுண்டுகளையே படத்தில் காண்கிறீர்கள்.

## பெண்கள் இடஒதுக்கீடு பற்றி விவாதித்தது போதும் உடனே பாராளுமன்றில் தாக்கல் செய்யுங்கள்!

### கம்யூனிஸ்ட்டுக்கள் மன்மோகன்சிங்கிடம் கோரிக்கை

பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா பற்றி விவாதித்தது போதும். உடனே தாக்கல் செய்யுங்கள் என்று மன்மோகன் சிங் அரசுக்கு கம்யூனிஸ்ட்டு கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.


மக்களவையிலும் மாநில சட்ட சபைகளிலும் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் மசோதாவை மத்திய அரசு தயாரித்திருக்கும் நிலையில் இந்த மசோதா பற்றி அரசியல் கட்சிகளின் கருத்தை மத்திய அரசு கேட்டறிந்து வருகின்றது. அதில் ஒருமனதான கருத்து இதுவரை உருவாகவில்லை. இந்த நிலையில் இந்திய கம்யூனிஸ்ட்டு பொதுச் செயலாளர் ஏ.பி. பரதன் இது பற்றி கூறுகையில்,

பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு செய்யும் மசோதா பற்றி 1996இல் இருந்தே விவாதித்துக் கொண்டிருக்கின்றோம். விவாதித்தது போதும். இனிமேலும் அது பற்றி விவாதிக்கத் தேவையில்லை. சமீபத்தில்தான் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அது பற்றி விவாதித்தோம்.

அந்த மசோதாவை பாராளுமன்றத்தில் உடனே தாக்கல் செய்யுங்கள். அங்கு விவாதித்துக் கொள்ளலாம். நாட்டின் உயர்ந்த அமைப்பான பாராளுமன்றத்தில்தான் அந்த மசோதாவுக்கு தீர்வு கிடைக்கும்.

பெண்களுக்கு இடஒதுக்கீடு அளிப்பதற்காக மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கத் தேவையில்லை. இப்போது உள்ள நிலையிலேயே மசோதாவை அறிமுகப்படுத்தலாம்.

சில மசோதாக்கள் ஒருமித்த கருத்து ஏற்படாமலேயே பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சம்பவங்கள் நிறைய நடந்துள்ளன. இந்த மசோதாவும் மூன்றில் இரண்டு பங்கு. பெரும்பான்மையுடன் நிறைவேறும் எனத் தெரிவித்தார்.



காவிரி டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் கல்லணை நேற்று முன்தினம் திறந்து விடப்பட்டபோது இடம்பெற்ற நிகழ்வு.

## வரும் சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.கவை ஆதரியோம்

### விஷ்வ இந்து பரிஷத் தகவல்

வருகின்ற சட்டமன்ற தேர்தல்களில் பா.ஜ.வை ஆதரிக்க மாட்டோம் என்று விஷ்வ இந்து பரிஷத் அறிவித்துள்ளது.

பா.ஜ.தலைவர் அத்வானி கட்சியில் தான் இழந்த செல்வாக்கை மீண்டும் நிலை நிறுத்த அயோத்தி விவகாரத்தை கையில் எடுத்துள்ளார். அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவதே பா.ஜ.வின் இலட்சியம் எனக் குரல் கொடுத்து வருகின்றார்.இது தொடர்பாக விஷ்வ இந்து பரிஷத்தின் (வி.எச்.பி.) துணை தலைவர் ஆச்சாரிய கிரிராஜ் கிஷோர் கருத்துத் தெரிவிக்கையில்,

அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவது தொடர்பாக எந்த அரசியல் கட்சிகளையும் நாங்கள் நம்பவில்லை எனத் தெரிவித்தார்.




கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம் - 2005

முருகப் பெருமான் அடியார்களே!

கலியுக வரதனாம் கந்தவேட்பரமன் வள்ளி மணவாளன் வண்ணமயிலேறும் வடிவழகன் திருமுருகனின் இவ்வாண்டு (பார்த்தீப வருடம்) மகோற்சவம் ஆடி மாதம் 25ஆம் நாள் 10-08-2005 புதன்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி 9ஆம் நாள் இரதோற்சவமும் 10ஆம் நாள் தீர்த்த உற்சவமும், 11ஆம் நாள் பூங்காவனத் திருவிழாவுடன் இனிது நிறைவேறத் திருவருள் பாலித்துள்ளது.

மகோற்சவ கால விபரம்

10-08-2005 புதன்கிழமை - கொடியேற்றம் பகல் 12.00 மணிக்கு
17-08-2005 புதன்கிழமை - சப்பறம் இரவு 8.00 மணிக்கு.
18-08-2005 வியாழக்கிழமை - தேர் காலை 9.00 மணிக்கு
19-08-2005 வெள்ளிக்கிழமை - தீர்த்தம் காலை 10.00 மணிக்கு
20-08-2005 சனிக்கிழமை - பூங்காவனம் இரவு 8.00 மணிக்கு.

காலை மாலை கிரியா விபரம்

காலை 9.30 மணிக்கு அபிஷேகம்
பகல் 11.00 மணிக்கு ஸ்தம்பபூசை
பகல் 12.00 மணிக்கு வசந்த மண்டப பூசை
மாலை 4.30 மணிக்கு விசேட பூசை
மாலை 5.00 மணிக்கு ஸ்தம்ப பூசை
இரவு 7.00 மணிக்கு வந்த மண்டப பூசை


குறிப்பு :- கடை வாடகைக்கு எடுப்பவர்கள் ஆலய அறங்காவலருடன் தொடர்பு கொள்ளவும்.

ஆலய அறங்காவலர் சபையினர்.

(சி-12493)

# முக்கோண ஒருநாள் இறுதிப் போட்டி
# இந்தியா—சிறிலங்கா அணிகள் பலப்பரீட்சை





மூன்று நாடுகள் கலந்து கொண்ட முக்கோண ஒரு நாள் போட்டியின் இறுதிப் போட்டியில் இன்று சிறிலங்கா, இந்திய அணிகள் பலப்பரீட்சை நடாத்துகின்றன.

நேற்று முன்தினம் நடைபெற்ற பரபரப்பான கடைசி லீக் போட்டியில் ஏழு ஓட்டத்தால் மேற்கிந்தியத்தீவை தோற்கடித்த இந்தியா இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

ஏற்கனவே, இரண்டு லீக் போட்டியிலும் சிறிலங்கா அணியிடம் தோல்வியைச் சந்தித்த இந்திய அணி இறுதிப் போட்டியில் பழிதீர்க்கும் வகையில் ஆடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, சிறிலங்கா அணியில் முன்னணிப் பந்து வீச்சாளர் சமிந்தவாஸ் மீண்டும் அணியில் இணைந்துள்ளதால் போட்டி இறுதி வரை பரபரப்பாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவும் சிறிலங்காவும் இதுவரை 81 ஒரு நாள்போட்டிகளில் மோதியுள்ளன. இதில் இந்தியா 41 ஆட்டங்களில் வெற்றி பெற்றுள்ளது. 33இல் தோற்றுள்ளது. ஏழு ஆட்டங்கள் முடிவு இல்லாமல் போனது. நாளை மோதுவது 82ஆவது போட்டியாகும்.

## பின்வரிசை வீரர்கள் பாராட்டுக்குரியவர்கள்



- பொண்டிங்

இங்கிலாந்துடனான ஆஷஸ் கிண்ணத்துக்கான இரண்டாவது போட்டியில் அவுஸ்திரேலியா தோல்வியுற்ற போதும் கடைசியாக துடுப்பெடுத்தாடிய பந்துவீச்சாளர்களான ஷேன் வோர்ன், பிரட்லீ, கஸ்பரோவிச் ஆகியோரின் துடுப்பாட்டம் பாராட்டுக்குரியதாகும் என அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கிபொண்டிங் தெரிவித்துள்ளார். வெற்றியின் விளிம்புக்கு வந்த நிலையில் வாய்ப்பு அவர்கள் பக்கம் திரும்பியது என்று கூறிய அவர் இரண்டாவது போட்டியில் தோற்ற போதும் அடுத்தடுத்த போட்டிகளில் தனது அணி வெல்லும் என்றார்.

இறுதியாக ஆட்டமிழந்த கஸ்பரோவிச் தெரிவிக்கும்போது, இந்த ஆட்டமிழப்பு தனது வாழ்க்கையில் மறக்க முடியாத கறையாகும் எனத் தெரிவித்துள்ளார். பாரிய புகழ்ஒன்றுக்கான வாய்ப்பு இருந்த போதும் இறுதியில் ஏமாற்றமே கிடைத்தது என்றார் அவர்.




## 20 கிலோ மீற்றர் நடைப்போட்டி இவனோவா புதிய உலக சாதனை



பின்லாந்திலுள்ள ஹெல்சின்கி நகரில் உலக தடகள சம்பியன் ஷிப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் பெண்களுக்கான 20 கிலோ மீற்றர் தூர நடைப்பந்தயம் நடந்தது. இதில் 50இற்கும் மேற்பட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வீராங்கனைகள் கலந்து கொண்டார்கள்.

ரஷ்ய வீராங்கனை இவானோவா மொத்தத் தூரத்தை ஒரு மணி 25 நிமிடம் 41 வினாடியில் கடந்து புதிய உலக சாதனை படைத்தார். அவருக்கு தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது. முதல் பரிசாக 60 ஆயிரம் அமெரிக்க டொலரும், புதிய உலக சாதனை படைத்ததற்காக ஒரு இலட்சம் அமெரிக்க டொலரும் அவருக்குப் பரிசாக கிடைத்தன.

## ஆஷஸ் கிண்ணத்தை இங்கிலாந்து கைப்பற்றும்

இங்கிலாந்தில் நடைபெறும் ஆஷஸ் கிண்ண டெஸ்ட் கிரிக்கெட் தொடரை இங்கிலாந்து வென்றுவிடும் என அவ்வணியின் சகல துறை ஆட்டக்காரரான அன்ருபிளிண்டொப் தெரிவித்துள்ளார். எனினும் அவுஸ்திரேலிய அணியுடன் கடுமையாகப் போராட வேண்டியிருப்பதையும் அவர் வலியுறுத்துகிறார்.

இரண்டாவது போட்டியில் ஏழு விக்கெட்டுக்களைக்கைப்பற்றியதுடன் இரு அரைச்சதங்களையும் பிளிண்டொப் பெற்றார். அதற்காக அவர் ஆட்ட நாயகனாக அறிவிக்கப்பட்டார்.

அப்போட்டியில் அவுஸ்திரேலிய கடைநிலை வீரர்கள் சிறப்பாக ஆடியதை பாராட்டிய பிளிண்டொப் பிரட்லீயின் ஆட்டத்தை குறிப்பிட்ட அவர் பின்னர் தோல்வியடைந்ததாக தெரிவித்தார். அவரை ஆட்டமிழக்கச்செய்ய கடும் போராட்டம் நடத்தியும் தன்னால் முடியாது போய்விட்டதாக அவர் வருத்தப்படுகிறார். லீ,வோனுடன் இணைந்து 43 ஓட்டங்களையும் கஸ்பரோவிச்சுடன் இணைந்து 59 ஓட்டங்களையும் இணைப்பாட்டமாகப் பெற்றன.



பிளிண்டொப்



பின்லாந்தில் நடந்த உலக தடகள சம்பியன்ஷிப் போட்டியின் 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் அமெரிக்கர்வின் காட்லின் வெற்றி பெற்றார்.

## பொன்விழா ஞாபகார்த்த கால்பந்து போட்டி
### விக்னேஸ்வரா, சுப்பராங் அணிகள் இறுதிப் போட்டியில்

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழாவை முன்னிட்டு நடாத்தப்படும் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட அரையிறுதிப் போட்டியில் வெற்றிபெற்ற சுப்பராங், விக்னேஸ்வரா அணிகள் இறுதிப் போட்டிக்கு தெரிவாகின.

உதிக்கும் திசை அணியை எதிர்த்தாடிய சுப்பராங் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

விக்னேஸ்வரா ஏ அணிக்கும் விக்னேஸ்வரா பி அணிக்கும் இடையிலான போட்டியில் விக்னேஸ்வரா, ஏ அணி 4-2 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றிபெற்றது. இறுதிப் போட்டி இன்று மாலை நடைபெறவுள்ளது.

இதேவேளை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணிக்கும் கிளிநொச்சி ம.வி அணிக்கும் இடையில்நடைபெற்ற 30 ஓவர் கொண்ட சினேகபூர்வ கடினப்பந்து போட்டியில் கிளி. ம.வி அணி 14 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (கு)

## கே.சி.சி.சி. கிண்ண கிரிக்கெட் போட்டி
### பற்றீசியன்ஸ் அணி சம்பியனானது

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்திற்கான இறுதியாட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகத்தை ஐந்து இலக்குகளால் வெற்றிபெற்று கே.சி.சி.சி. கிண்ணத்தைக் கைப்பற்றியது.

கொக்குவில் மத்திய சனசமூகநிலைய விளையாட்டுக்கழகம் கே.சி.சி.சி. கிண்ணத்திற்காக யாழ். மாவட்ட ரீதியில் நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகமும் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பற்றீசியன்ஸ் அணித் தலைவர் தமது அணியை களத்தடுப்பில் ஈடுபடப்பணித்தார். அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம் 40 ஓவர் நிறைவில் ஒன்பது இலக்குகளை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லவேந்திரா 60 ஓட்டமும், ரமணன், நிசபன் (ஆட்டமிழக்காமல்), ரதிஸ்குமார் ஆகியோர் முறையே 19, 11, 10 ஓட்டங்களை அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் ஜெயமுகுந்தன் நான்கு இலக்குகளையும், பார்த்தீபன் மூன்று இலக்குகளையும் தேவரஞ்சன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

168 ஓட்டம் என நிர்ணயிக்கப்பட்ட வெற்றி இலக்குடன் களமிறங்கிய பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழகம் 24.2 ஓவர் எதிர்கொண்டு ஆறு இலக்கை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் பார்த்தீபன் ஆட்டமிழக்காது 45 ஓட்டமும், விஜியாளன், சுஜீவன், தேவரஞ்சன் ஆகியோர் முறையே 37, 20, 18 ஓட்டங்களை அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.


பந்துவீச்சில் ரதீஸ்குமார் இரண்டு, நிசபன், லவேந்திரா, மதன்ராஜ் ஆகியோர் தலா ஒரு இலக்குகளைக் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியில் சிறந்த துடுப்பாட்டரராக ஜொனியன்ஸ் வீரர் லவேந்திராவும், சிறந்த களத்தடுப்பாளராக பற்றீசியன்ஸ் அணி வீரர் பிரதீபனும், சிறந்த பந்து வீச்சாளராக பற்றீசியன்ஸ் அணி வீரர் ஜெயமுகுந்தனும், ஆட்ட நாயகனாக பற்றீசியன்ஸ் அணி வீரர் பார்த்தீபனும் தெரிவு செய்யப்பட்டனர். கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணத்தை மூன்றாவது தடவையாக பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழகம் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. (கீ)

## பாராட்டு



2005 மாகாண மட்ட தடகள விளையாட்டுப் போட்டி வவுனியா மாநகர சபை மைதானத்தில் கடந்த 16, 17-07-2005 தொடக்கம் 22, 24-07-2005 ஆகிய தினங்களில் நடைபெற்றது. விளையாட்டுப் போட்டிகளில் முல்லைத்தீவு மாவட்ட பாண்டியன்குளம் மகாவித்தியாலய உயர்தர மாணவன் மகாலிங்கம் மயூரன் 1500 மீற்றர் ஓட்டத்திலும், 800 மீற்றர் ஓட்டத்திலும் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். இதேபோன்று மு. பாண்டியன்குளம் மகாவித்தியாலய மாணவியான நாகேந்திரன் சோபனா 800 மீற்றர் தடகள ஓட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். இவர்களின் வெற்றியை கல்விச் சமூகத்தினர், மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் பாராட்டுக்கள் தெரிவித்துள்ளனர். (24)



பின்லாந்து ஹெல்சின்கி மைதானத்தில் உலக தடகள போட்டிகள் நேற்று முன்தினம் தொடங்கின. இதில் பெண்களுக்கான உயரம் தாண்டுதலில் பிரான்ஸ் வீராங்கனை புனிசே பார்பர் முதலிடம் பெற்றார்.

## மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும்

மாபெரும் மாட்டு வண்டிச சவாரிப் போட்டியும், கைக்கொடிச் சவாரிப் போட்டியும் விசுவமடு சவாரித் திடலில் நேற்று முன்தினம் சிறப்புற நடைபெற்றது.நான்கு பிரிவுகளாக நடைபெற்ற இப்போட்டி தேசியக்கொடி ஏற்றலுடன் சிறப்புடன் ஆரம்பமாகி நடைபெற்றது.


இறுதியில் வெற்றிபெற்றவர்களுக்கு 5000 ரூபா பணப்பரிசும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. மேற்படி போட்டியை முல்லை. மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும்,விசுவமடு விவசாயிகளும், முல்லை மாவட்ட கமக்கார அமைப்பினரும் இணைந்து நடத்தினர். (46)

## உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகத்தின் கிரிக்கெட் போட்டி மீதான தடை நீக்கம்

உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகத்திற்கு விதிக்கப்பட்டிருந்த கிரிக்கெட் போட்டி மீதான தடை நீக்கப்பட்டுள்ளது.

மேற்படி தடை நீக்கம் கடந்த ஆறாம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ராஜா தெரிவித்தார். 23-12-2004 அன்று மேற்படி கழகம் மீது தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (சி)

## சிந்தனைக்கு



நாம் ஒரு சத்திய இலட்சியத்தில் பற்றுக்கொண்டு- உறுதி கொண்ட மக்களாக ஒன்று திரண்டு நின்றால், எந்வொரு சக்தியாலும் எம்மை அசைக்கவோ அழிக்கவோ முடியாது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 09.08.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## கையாலாகா நிலையில்....!

நோர்வேயின் துணைவெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் தனது நான்கு நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு நோர்வே திரும்பியுள்ளார். இவரின் பயணம் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் முன்னேற்றம் எதனையும்– அதாவது தற்போதைய சூழ்நிலையில் மாற்றம் எதனையும் ஏற்படுத்தியதாக இல்லை. வந்தார், சென்றார் என்ற நிலையில் மட்டுமே அவரது விஜயம் அமைந்துவிட்டது.

இன்றைய நிலையில் தமிழ் மக்கள் தொடர்பான விவகாரத்தில் இரு பிரச்சினைகள் முனைப்புப் பெற்றவையாகியுள்ளன. ஒன்று நோர்வே தரப்பின் கண்காணிப்பில் உள்ள யுத்த நிறுத்தம், இரண்டாவது நோர்வே தரப்பால் முன்மொழியப்பட்டு இணக்கம் காணப்பட்ட பொதுக்கட்டமைப்பு. இவை இரண்டின் எதிர்காலமுமே இன்று கேள்விக்குள்ளாகியுள்ளது!அதாவது நெருக்கடிக்குள்ளாகியுள்ளதென்பதே யதார்த்தமாயுள்ளது.

யுத்தநிறுத்த உடன்பாடு மூன்றரை ஆண்டுகளைக் கடந்துவிட்ட நிலையிலும் அது செம்மையாக அமுல்படுத்தப்பட்டதாக இல்லை. யுத்தநிறுத்த உடன்பாட்டு விதிகள் பலவற்றைச் சிறிலங்கா அரசாங்கம் இன்னமும் அமுல் செய்யத் தயாராக இல்லை. அமுல் செய்வது குறித்து பரிசீலிக்கவும் அது தயாராக இல்லை என்பதே யதார்த்தமாகும்

குறிப்பாக மக்களின் மீள்குடியேற்றம், சிறிலங்கா இராணுவத்தினரின் துணைப்படைகளாகச்செயற்படும் தமிழ் தேசவிரோதக் குழுக்களின் ஆயுதங்களைக்களைதல் போன்ற விடயங்களில் அரசாங்கமும் முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்வதாகத் தெரியவில்லை. மறுவளமாகக் கூறுவதானால் யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கு ஊறுவிளைவிக்கும் இவ் விடயங்களில் அக்கறை செலுத்துவதில் கூட சிறிலங்கா அரசாங்கம் தயாராக இல்லை.

சிறிலங்கா அரசாங்கம் மேற்கூறப்பட்ட யுத்தநிறுத்த உடன்பாட்டு விதிகளை நிறைவேற்ற வேண்டும் எனக்கோரி தமிழ்மக்கள் பல போராட்டங்களை ஏற்கனவே நடத்தியுள்ளனர். விடுதலைப் புலிகளும இது தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்பாளரிடமும், சமாதான ஏற்பாட்டாளரிடமும் அனைத்துச் சந்திப்புக்களிலும் வலியுறுத்தியுள்ளனர்.

அது 'மட்டுமன்றி இவ்விடயங்கள் இன்று பல நாடுகளிலும் புரியப்பட்டதொரு விடயமாகவும் உள்ளது. அதாவது யுத்தநிறுத்த உடன்பாடு சீறிலங்கா ஆயுதப்படைகளின் துணைப்படைகளாக இயங்கும் தமிழ்க்குழுக்களால் அச்சுறுத்தலுக்குள்ளாக்கியுள்ளதென்பது புரியப்பட்டுள்ளது. அமெரிக்கா உள்ளிட்ட சில பிறநாடுகள் இதனைச் சிறிலங்கா அரசின் கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளன.


ஆயினும் நிலைமையில் மாற்றம் எதுவும் இல்லை. அதாவது அரசாங்கம் தனது அணுகுமுறையில் மாற்றம் எதனையும் செய்வதாக இல்லை. சிறிலங்கா ஆயுதப்படையுடன் இணைந்து செயற்படுவதான ஆயுதக்குழுக்கள் எவையும் இல்லை என்றே சாதிக்க முனைகின்றது. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அண்மையில் கூட இதனையே வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் யுத்தநிறுத்தம் எதிர்நோக்கிவரும் நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதில் முன்னேற்றம் காண்பதென்பது சாத்தியப்பாடானதொன்றாகத் தெரியவில்லை. யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவும், சமாதான ஏற்பாட்டாளர்களான நோர்வேத் தரப்பும் யுத்தநிறுத்தம் பாதுகாக்கப்பட வேண்டும் என அறிக்கைவிடும் நிலைக்கு அப்பால் எதையும் மேற்கொள்ள முடியாத கையாலாகாத நிலையிலேயே உள்ளது.

இதேசமயம், பொதுக்கட்டமைப்பு விடயத்தில் நிலைமை மேலும் மோசமானதாகவே உள்ளது. அதாவது யுத்தநிறுத்த விடயத்தில் கருத்துக்கள் வெளியிடக் கூடியதானதொரு நிலையாவது காணப்படுகின்றதாயனும், பொதுக்கட்டமைப்பு விடயத்தில் நிலைமை அவ்வாறானதாகக் கூட இல்லை. அதாவது நீதிமன்றத்தடை, நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் உள்ளமை போன்றவற்றால் அது குறித்துப் பேசுவது சட்டவிரோதமானதாகவும், பயனற்றது என்றதொரு நிலையும் ஏற்பட்டுள்ளதெனலாம்.

சிறிலங்கா ஆட்சியாளர்களைப் பொறுத்து இது ஒரு விருப்பிற்குரிய சூழ்நிலையாகவும் அமைந்துள்ளது. இது மட்டுமன்றிப் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அமெரிக்கா,ஜப்பான் போன்ற நாடுகள் நடந்துகொண்டுள்ள விதமானது இவ் அமைப்பினைப் பலவீனப்படுத்தும் வகையில் அமைந்துவிட்டது எனக் கூறுவதும் தவறாகமாட்டாது. அதாவது இவ் அமைப்பு வெகுவாகப் பலவீனப்பட்டுள்ளதோடு, செயற்படமுடியாத கட்டத்தையும் அடைந்துள்ளதெனலாம்.

இந்நிலையில், நோர்வேயின் வெளிவிவகார அமைச்சரின் நான்கு நாள் விஜயம் சூழ்நிலையில் எந்த விதமாற்றத்தையும் ஏற்படுத்தும் சக்தியற்றதொன்றாகவே அமைந்தது. இது ஒருவகையில் சமாதான முயற்சிகளில் நோர்வேத் தரப்பின் பலவீனமாகவும் கொள்ளத் தக்கதே. ஏனெனில் உடன்பாடுகளின் அமுலாக்கத்தை வலியுறுத்த முடியாத நிலையிலும் அமுலாக்குமாறு அழுத்தத்தை கொடுக்க முடியாத நிலையிலும் நோர்வே தரப்பு இருப்பதை அதன் பலவீனம் எனக் கூறுதல் தவறாகமாட்டாது.




# ஈழத்தமிழர்களின் விடிவிற்கு தனித் தமிழீழமே நிரந்தரத் தீர்வு

### — தமிழின விடியல் புலிகள் இயக்கம்

(சென்னை)

தமிழகத்தில் புதிதாக தொடங்கப்பட்டிருக்கும் தமிழின விடியல் புலிகள் இயக்கம் என்ற கட்சி ஈழத்தமிழர்களின் விடிவிற்கு தனித் தமிழீழமே நிரந்தரத்தீர்வு என்றும் ஈழத்தமிழர்களைப் பாதுகாக்க எத்தனை தியாகத்தையும் செய்யத் தயாராக இருப்பதாகவும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

கடந்த மாதம் மதுரையில் தமிழின விடியல் புலிகள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கட்சியை ஆரம்பித்திருப்பவர் மதுரை தி.மு.க முன்னாள் இளைஞர் அணிச் செயலாளர் பசும்பொன் பாண்டியன் ஆவார்.

கட்சியின் தொடக்க மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் முக்கியமாக இலங்கையில் தமிழ் மொழியால், இனத்தால், பாரம்பரியத்தால், பண்பாட்டால் நாகரிகத்தால் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இரத்தபாச உறவு கொண்டுள்ள ஈழத்தமிழர்களின் விடியலுக்கு நிரந்தரத் தீர்வு தனித் தமிழீழம்தான்.

ஈழத்தமிழர்களைப் பாதுகாக்க எத்தகைய தியாகத்தையும் செய்ய தமிழின விடியல் புலிகள் இயக்கம் தயாராகவுள்ளது என்பனவாகும்.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டதை அடுத்து தமிழகப் புலனாய்வுப் பொலிசார் இந்தக் கட்சியின் நடவடிக்கைகள் குறித்து தீவிரமாக கண்காணிக்கத் தொடங்கியுள்ளனர்.

# உரிமைகோரிப் போராட முயற்சித்த தமிழர்களை கொன்றொழித்த நிலை மீண்டும் வரக்கூடாதாம்

### — அக்கறையுடன் இருக்கின்றாராம் சந்திரிகா

(கொழும்பு)

உரிமைகோரி போராட்டம் நடத்த முயற்சித்த தமிழ்மக்களை கொன்றொழித்த நிலை மீண்டும் வரக்கூடாது. அந்த விடயத்தில் தான் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டுக் கொண்டிருப்பதாக சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

புதிதாக அமைக்கப்படவுள்ள ஊவா - வெல்லஸ்ஸ பல்கலைக் கழகத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு ஆற்றிய உரையிலேயே சந்திரிகா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆட்சியாளர்களின் கருத்துக்களுக்கு எதிர்மாறான கருத்துக்கள் கொண்டவர்களையும் இரவோடிரவாக அழித்தொழிக்கும் நிலையும் அன்று இருந்து வந்தது. சந்திக்கு சந்தி டயர்களில் மக்களின் சடலங்களே அன்று காணப்பட்டன எனவும் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளார்.

நவாலியில், நாகர்கோவிலில், செம்மணியில் என தமிழர் தாயகத்தின் பல்வேறு பகுதிகளில், சந்திரிகாவின் படைகளினால் ஆயிரக்கணக்கான அப்பாவித்தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ள நிலையில் சந்திரிகாவின் இந்தக் கருத்து நகைப்பிற்கிடமாக இருப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்

### — அம்பாறை கஞ்சிகுடிச்சாறில் —

# தமிழீழ சுகாதார சேவையின் இலவச வைத்திய முகாம்

(மட்டக்களப்பு)

போரினால் இடம்பெயர்ந்து மீளக் குடியேறிய மக்களுக்கான வைத்திய முகாம் நேற்றுமுன்தினம். அம்பாறை மாவட்டத்தின் கஞ்சிகுடிச்சாறு என்னுமிடத்தில் நடைபெற்றது. தமிழீழ சுகாதார சேவை ஏற்பாடு செய்திருந்த இந்த இலவச வைத்திய சிகிச்சை முகாமில் அரச வைத்திய அதிகாரிகள், மற்றும் தமிழீழ மருத்துவப் பிரிவினரும், சிகிச்சையளித்தனர். போரினால் இடம்பெயர்ந்து மீளக் குடியேறிய தங்கவேலாயுதபுரம், கஞ்சிகுடிச்சாறு மற்றும் றூபங் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் சிகிச்சை வசதிகளைப் பெற்றனர்.

# சனாத்பத்யாகும் பகல்கனவில் ரனில் இருந்து வருகிறார்

### –தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் சாடல்

(கொழும்பு)

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் சனாதிபதியாகும் பகல்கனவில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இருந்துவருதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜயவர்த்தனவின் படுகொலையை தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது. இராணுவப் புலனாய்வு மற்றும் பொலிஸ் அதிகாரிகளைக் கொலைசெய்யும் திட்டத்தின் ஒருகட்டமாகவே இந்தப் படுகொலையும் இடம் பெற்றிருப்பதாகவும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. மறுபக்கத்தில் கொலைகளை அதிகரித்து வருவதாகவும் அது குறிப்பிட்டுள்ளது. அத்துடன், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அரசியல்வாதிகளும், அரசசார்பற்ற நிறுவனங்களும் இந்தக் கொலைகள் தொடர்பாக மௌனம் சாதித்துவருவதாகவும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் மேலும் தெரிவித்துள்ளது.

# ஆழிப்பேரலையால் வீடுகளை இழந்தோர் காத்தான்குடியில் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடிப்பிரதேசத்தில் ஆழிப்பேரலையினால் தமது இருப்பிடங்களை இழந்த குடியிருப்பாளர்கள் நேற்று முழுநாளும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



மாரி மழை பெய்யமுன்பு தங்களுக்குரிய நிரந்தர வீடுகளை சிறிலங்கா அரசாங்கம் அமைத்துத்தர வேண்டும் என்று கோரி இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றிற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டார்கள்.

இடைத்தங்கல் முகாம்களிலும் தற்காலிக குடியிருப்புக்களிலிருந்து நேற்றுக்காலை வெளியேறிய ஆர்ப்பாட்டக்காரர்கள் அக்பர் பள்ளிவாசல் முன்றலைச் சென்றடைந்து அங்கிருந்து பிரதேச செயலகம்வரை பேரணியொன்று நடத்தினார்கள்.

பிரதேச செயலக முன்றலில் நேற்றுப்பகல் முழுவதும் இவர்கள் அமர்ந்துகொண்டமையினால் செயலகம் இயங்கவில்லை.

பிரதான வீதியில் கூடாரங்களை அமைத்து அடுப்புக்களை மூட்டி சமையலிலும் இவர்கள் ஈடுபட்டு இருந்தமையினால் அவ்வழியாக இடம்பெற்றுவந்த போக்குவரத்துச் சேவைகளும்' தடைப்பட்டிருந்தன.

# கிளிநொச்சி, மல்லாவியில் புதிதாக தமிழீழ நுண்கலைக்கல்லூரிகள் திறப்பு

தமிழீழ நுண்கலைப்பிரிவினரால் மேலும் புதிய இரண்டு நுண்கலைக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. எதிர்வரும் 19ஆம் திகதி கிளிநொச்சி நுண்கலைக்கல்லூரியும், 21ஆம் திகதி மல்லாவி நுண்கலைக்கல்லூரியுமே ஆரம்பிக்கப்படவுள்ள கல்லூரிகளாகும்.

இவற்றுக்கான கட்டடம் மற்றும் முன்னாயத்த வேலைகள் விரைவாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

மண்பற்றும், மொழிப்பற்றும், தேசிய நோக்கும், நற்பண்புகளும் நிறைந்த கலைஞர்களை உருவாக்குவதே இக்கல்லூரிகளின் தலையாய நோக்கமாகும். இவ்வகையில் ஏற்கனவே தமிழீழ நுண்கலைப்பிரிவினரால் முள்ளியவளை நுண்கலைக்கல்லூரியும், புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரியும் வெகுசிறப்பாக நடைபெற்று வருவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# பொலிஸ் அத்தியட்சகர் கொலை தொடர்பில் 15 பேரிடம் விசேட குழு விசாரணை

யாழ். இணுவிலில் கொல்லப்பட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜயவர்த்தன கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக யாழ். சென்றுள்ள இரகசியப் பொலிசார் இதுவரை சுமார் 15 பேரிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இணுவில் பிரதேசத்தில் ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையை அடுத்து நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக மக்கள் இருந்த பகுதிக்குச் சென்ற பொலிஸ் அத்தியட்சகர் மக்கள் கூட்டத்திற்குள் சென்றதும் மறைந்துவிட்டார் என்று சம்பவத்தை நேரில் கண்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் மக்கள் கூட்டத்திற்குள் சிக்கிக்கொண்டதால் பொலிசாரினால் அவரைக்காப்பாற்ற முடியாமல் போயுள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது.

சார்ள்ஸ் விஜயவர்த்தனவின் கொலைக்கும் ஏனைய கொலைகளுக்கும் இடையே பெரும் வித்தியாசம் உள்ளது. இந்தக்கொலை தொடர்பாக பொலிசார் உறங்கிக்கொண்டிருக்கப் போவதில்லை என பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

கொலை செய்யப்பட்ட பொலிஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜயவர்த்தனவின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்வதற்காக குருணாகலையிலுள்ள அவரின் உத்தியோக பூர்வ இல்லத்திற்கு சென்றபோதே சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் தலைமையில் 12 பேரைக் கொண்ட குழுவொன்று சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக யாழ். சென்றுள்ளதாகவும், இது குறித்து கண்காணிப்புக் குழுவிற்கும், மதத்தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த பொலிஸ்மா அதிபர், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கூடிய விரைவில் சட்டத்தின்முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

தற்போது சட்டத்தைக் கையில் எடுப்பது அங்கு காணக் கூடிய ஒன்றுதான். இவ்வாறான நிலையில் நாம் தெளிவாகக் கூறுகிறோம். எவருக்கும் சட்டத்தைக் கையில் எடுக்க இடமளியோம். இச்சம்பவத்தின் பின்னால் யார் உள்ளனரெனக் கண்டறியப்படுமெனத் தெரிவித்தார்.

பொலிஸ் அத்தியட்சகர் மீது தாக்குதல் நடத்தியவர்களை தாங்கள் இனங்கண்டுள்ளதாகவும், பொலிஸ் அத்தியட்சகரின் சீருடைக்குப் பதிலாக அணிவிக்கப்பட்டிருந்த உடை யாருக்கு சொந்தமானது என்பதை வியாழன் இரவே கண்டு பிடித்துவிட்டோம் என்றும் யாழ்ப்பாணத்திலுள்ள பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

# சக்திவாய்ந்த தொலைத்தொடர்பு சாதனம் இளைஞர் ஒருவரிடம் இருந்து மீட்பு!

இலங்கையிலிருக்கும் அனைத்துப் பொலிஸ் நிலையங்களினதும் தகவல் பரிமாற்றங்களை செவிமடுக்கக் கூடிய அதிசக்தி வாய்ந்த தொலைத் தொடர்பு சாதனமொன்று உட்பட சக்திவாய்ந்த மேலும் சில தொலைத் தொடர்பு சாதனங்களுடன் கடந்த ஐந்தாம் திகதி பன்னலையில் வைத்து இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தொலைத்தொடர்பு சாதனத்தினூடாக மிகத் தெளிவாகப் பொலிசாரின் தகவல் பரிமாற்றங்களைச் செவிமடுக்கக் கூடியதாக உள்ளதென குளியாப்பிட்டி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யு. பி. தயாரத்ன தெரிவித்தார்.

சில வருடங்களுக்கு முன்னர் சவுதி அரேபியாவில் தொழில் புரிந்துவிட்டு நாடு திரும்பிய இந்த இளைஞர் இலங்கைக்கு வருகையில் அதனைக்கொண்டு வந்ததாக விசாரணைகளின்போது தெரிவித்துள்ளார்.

அத்துடன் உலகிலுள்ள எந்தவொரு தொலைக்காட்சி சேவையையும் பார்வையிடக்கூடிய வகையிலான சாதனமொன்றும் , 200 மீற்றர் தூரத்திற்குள் தொலைக்காட்சியைச் செயலிழக்கச் செய்யக்கூடிய வகையிலான தூரக்காட்டுப்பாட்டு சாதனமொன்றும் கைது செய்யப்பட்ட இந்த இளைஞரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளாதாகவும் கூறப்படுகிறது.

இளைஞரிடம்மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

## திருத்தம்

நேற்றைய ஈழநாதம் நாளேட்டின் முன்பக்கத்தில் மிருசுவிலில் வாள் வெட்டு... என்ற தலைப்பில் இடம்பெற்ற செய்தியின் முதல்வரியில் மிருசுவில் என்பது மீசாலை எனத் தவறாக இடம்பெற்றுள்ளது. தவறுக்கு வருந்துகிறோம்.

-அரச கட்டுப்பாட்டுப்பகுதியூடாக-

# புலிகள் பயணிக்கும் வாகனங்களில் படையினரும் பயணிப்பர்?

அரச கட்டுப்பாட்டுப்பிரதேசங்களின் ஊடாக வடக்கிலிருந்து கிழக்கிற்கும், கிழக்கிலிருந்து வடக்கிற்கும் சென்று திரும்பும் விடுதலைப் புலிகளுக்கு பாதுகாப்பு வழங்கும்போது விடுதலைப்புலிகளுடன் படையின்ரும் பயணிக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சிறிலங்கா அரசாங்கம் படையதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாக இணையத்தளமொன்று தெரிவிக்கிறது.

விடுதலைப்புலிகள் பயணிக்கும் வாகனங்களில் எத்தனை உறுப்பினர்கள் உள்ளனர் என்ற எண்ணிக்கைக்கு ஏற்ப வழித்துணையாக பயணிக்கும் படை அதிகாரிகளினதும் வீரர்களினதும் எண்ணிக்கை அமையும்.

அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களின் ஊடாக பயணிக்கையில் விடுதலைப் புலிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக அவர்கள் பயணிக்கும் வாகனங்களில் பாதுபாப்புப் படையினரும் பயணிக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என விடுதலைப்புலிகள் விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக படைவட்டாரத் தகவல்களை மேற்கோள்காட்டி அது மேலும் தெரிவிக்கின்றது.

### யாழ்...

தினம் யாழ்ப்பாணம் தனியார் கல்வி நிலையம் ஒன்றிற்கு கல்வி கற்பதற்காகச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தபோதே இவ் விபரீதம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு இரு மணித்தியாலங்கள் தாமதமாக வந்த யாழ்ப்பாண மற்றும் கோப்பாய்ப் பிரிவுகளில் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டனர். (37)

### அனைத்து...

மேர்வின் சில்வா தமிழ் மக்களுக்கு எதிராக தெரிவித்திருக்கும் கருத்து வகுப்பு வாதத்தை ஊக்குவித்து நாட்டில் இனக்கலவரத்தை ஏற்படுத்தும் இவரது இந்த முயற்சிக்கு சிங்கள மக்கள் துணைபோக மாட்டார்கள் என்பது உறுதி என வாசுதேவ நாணக்கார தெரிவித்தார்.

பொதுகட்டமைப்பிற்கு எதிரான ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியனவற்றின் நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகவே, மேர்வின் சில்வாவின் நடவடிக்கைகளும் அமைந்திருக்கின்றன.

சிங்கள மக்கள் சார்பாக நாங்கள் மன்னிப்புக் கேட்பது அர்த்தமற்றது.

ஏனெனில் அவர் ஒரு சிங்களக் குடிமகன் என்பது பெரும் கேள்விக் குறி எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவ் ஊர்வலத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ல் மாகாண மக்கள் முன்னணி க் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ ம் காங்கிரஸ் ஆகியன உட்பட பல கட்சிகளும் அமைப்புகளும் கலந்து கொண்டனர்.

மேல்மாகாண மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் அவர்கள் கருத்துக் கூறுகையில், தமது சமூகத்தினரை அவமரியாதைப் படுத்திய மேர்வின் சில்வா நாட்டுக்கும் அவமரியாதையை ஏற்படுத்திவிட்டார் என்றும், ஆகவே அவரை உடனடியாகப் பதவி விலக்க வேண்டும் என்றும் கூறினார்.

மலையகத் தமிழ்ச் சகோதரர்களின் இந்தப் போராட்டத்திற்கு தமது பூரண ஆதரவை வழங்குவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் கூறினார்.

# மக்களின் வாக்குரிமையைப் பறிக்க சந்திரிகா தலைமையிலான அரசு முயற்சி

## -ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு

கடந்த பொதுத்தேர்தலின்போது மக்களின் வயிற்றிலடித்த சனாதிபதி சந்திரிகா தலைமையிலான கூட்டணி அரசு அத்துடன் நின்றுவிடாது தற்போது மக்களின் வாக்களிக்கும் உரிமையையும் தட்டிப்பறிக்க முனைவதாகவும், ஐக்கிய தேசியக் கட்சி அதற்கு ஒருபோதும் இடமளிக்காது என்றும் ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் நடைபெற்ற சனாதிபதித்தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றியபோதே சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், கஷ்டப்படும் மக்களுக்கு சேவையாற்ற இந்த அரசாங்கத்திடம் எந்த விதமான திட்டங்களோ கொள்கைகளோகிடையாது.

மக்களின் உரிமைகளைப் பறிப்பதற்கான முயற்சிக்கு எதிராக மாபெரும் மக்கள் பேரணியினூடாக எச்சரிக்கை விடுக்கப்பட்டபோதிலும், அரசாங்கம் அதனைக் கவனத்தில் கொள்ளாதுவிட்டால் 2005 ஆம் ஆண்டு சனாதிபதித்தேர்தலை நடத்தக்கோரி மக்களை ஒன்றுதிரட்ட வேண்டியேற்படும்.

ஐக்கிய தேசியக்கட்சி விடுதலைப் புலிகளுடன் சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு யுத்தத்தை நிறுத்தியது. இதனால் பொலநறுவை மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய பிரதேசங்களில் தடைப்பட்டிருந்த விவசாய நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதேவேளை சனாதிபதித் தேர்தல் இவ்வாண்டு நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தி மக்களின் கையெழுத்துக்களைப் பெறும் நடவடிக்கைகள் நேற்றுக்காலை ஐக்கிய தேசியக கட்சிக் காரியாலயமான சிறிகோத்தாவில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த மனுவில் முதலாவதாக ஐக்கிய தேசியக்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க கையெழுத்திட்டார். அதன்பின்னர் நான்கு வாகனங்களில் இந்த மனு நான்கு திசைகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு பத்து இலட்சம் மக்களிடம் கையெழுத்துக்கள் பெறப்படவுள்ளன.

பத்துஇலட்சம் மக்களின் கையெழுத்துக்களுடன் இந்த மனு வரும் 24ஆம் திகதி தேர்தல் ஆணையாளர் தயாணந்ததிஸாநாயக்கவிடம் கையளிக்கப்படவுள்ளது.

அத்துடன் இவ்வாண்டினுள் சனாதிபதித்தேர்தல் நடத்தப்படுவதன் அவசியம் குறித்து மக்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் துண்டு பிரசுரங்களை விநியோகிக்கவும் வீடு வீடாகச் சென்று மக்களைச் சந்திக்கவும் ஐக்கிய தேசியக்கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

### திருமலை...

அதன் பின்னரே விக்னேஸ்வரன் இத்தகவலைத் தெரிவித்தார். திருமலை நகரில் முதலில் சிறிமாபுர மற்றும் சண்முகா இந்து மகளிர் கல்லூரி ஆகிய இடங்களில் நிறுத்தப்பட்டுள்ள படையின்ரை அகற்றவேண்டுமென்ற கோரிக்கையை சாதகமாகப் பரிசீலிக்க படை அதிகாரிகள் ஒப்புக்கொண்டதாகவும் ஞாயிறு கந்தளாயில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் சம்பவத்தை அடுத்து. படைக்குறைப்பை உடனடியாக மேற்கொள்வதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக படைத்தரப்புக் கூறியுள்ளதாகவும் கண்காணிப்புக் குழு பிரதிநிதி வீற்றன் தமக்குத் தெரிவித்ததாக விக்னேஸ்வரன் கூறினார். (25)

### வீரவணக்கம்...

வெடிவிபத்தின்போது போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

வீரவேங்கை - பவளக்குறிஞ்சி (கருணாநிதி - நவேந்தினி, 3ஆம் வட்டாரம் குடியிருப்புமுனை அண்ணாமலை மண்டூர் மட்டு) என்ற போராளியே சாவடைந்தவராவார்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### விடுதலைப்...

நடவடிக்கைகள் சர்வதேச சமூகத்தைக் கவர்ந்துள்ளது.

தமிழ்மக்களுக்கு சர்வதேச ரீதியாக ஏற்பட்டுவரும் ஆதரவுப் பலம் சிதைந்துபோகாமல் பாதுகாக்க வேண்டிய பணி எல்லோர் மத்தியிலும் உள்ளது எனவும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.